Registered as a Newspaper

# உதயன்

புதன் பொய்கை

விலை ரூ. 50

பக்கங்கள் 16

சுடர் : 38
கதிர் : 60

புதன்கிழமை 25 ஜனவரி 2023

தை 11 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

## பலாலி விமான நிலையத்துக்காக சுவீகரித்த காணிகளுக்கு இழப்பீடு

### தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் நாளையதினம் பதிவு நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜன.25

பலாலி விமான நிலைய விஸ்தரிப்புக்காக காணிகள் சுவீகரிப்பட்ட நிலையில், காணி உரிமையாளர்களுக்கு இழப்பீடு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. »15

# அரசமைப்புப் பேரவையூடாக தேர்தலை பிற்போடத்திட்டம்!

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் நேற்றுப் பரபரப்புத் தகவல்



கொழும்பு, ஜனவரி 25

உள்ளூராட்சிசபைத் தேர்தலைப் பிற்போடும் புதிய முயற்சியாக இன்று புதன்கிழமை கூடும் அரசமைப்புப் பேரவை ஊடாகத் தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர்களை மாற்ற அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. அரசின் இந்தச் சதிகளை ஜனநாயக ரீதியாகத் தோற்கடிப்போம் - இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். »15



## வாகனத்தால் மோதித்தள்ளி வீதியில் வைத்து வாள்வெட்டு

### யாழ்ப்பாணத்தில் வெறிச்செயல் துரித நடவடிக்கைக்கு உத்தரவு

யாழ்ப்பாணம், ஜன. 25

யாழ்ப்பாணம், சுன்னாகம் பகுதியில் நேற்றுப் பட்டப்பகலில் 'கப்' ரக வாகனம் ஒன்றால் சொகுசுக் காரொன்றை மோதித்தள்ளிய பின்னர் கண்மூடித்தனமாக வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தியதில் நால்வர் காயமடைந்தனர். »15

வன்முறைக் கும்பல்கள் அட்டூழியம்

## கண்டதும் துப்பாக்கிச் சூடுநடத்தும் உத்தரவைப்பெற பொலிஸ் முயற்சி

விரிவு:- பக்.15

## அம்புலன்ஸ் மோதி சிறுவன் உயிரிழப்பு

பூநகரியில் துயரம்

விரிவு:- பக்.15









மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## 60 கிலோ கஞ்சா அனலைதீவில் மீட்பு

யாழ்ப்பாணம், ஜன. 25
ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அனலைதீவுப் பகுதியில் 60 கிலோ கேரளக்கஞ்சா ஊர்காவற்றுறைப் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.
பொலிஸாருக்குக் கிடைத்த புலனாய்வுத் தகவல்களின் அடிப்படையில் மேற்படி கஞ்சாப் பொதிகள் மீட்கப்பட்டுள்ளன. இது தொடர்பில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று ஊர்காவற்றுறைப் பொலிஸார் தெரிவித்தனர். (அ-ம-27)

## வயோதிபத் தம்பதிகள் கொடூரமாகக் கொலை!

### அம்பாந்தோட்டையில் பயங்கரம்

கொழும்பு, ஜன. 25
வயோதிபர்களான கணவனும் மனைவியும் இனந்தெரியாத நபர்களால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இந்தக் கொடூரச் சம்பவம் அம்பாந்தோட்டை, திஸ்ஸமஹாராம பொலிஸ் பிரிவில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு இடம்பெறுள்ளது.
72 வயதுடைய கணவனும், 69 வயதுடைய மனைவியுமே இவ்வாறு கொல்லப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
இரண்டு மோட்டார் சைக்கிள்களில் முகமூடி அணிந்து வந்த நால்வர், வீட்டுக்குள் புகுந்து உறங்கிக் கொண்டிருந்த வயோதிபத் தம்பதியினர் இருவரையும் வெட்டிப் படுகொலை செய்துவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர் என்று ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. இந்தக் கொலைக்கு முன்பகை காரணமாக இருக்கலாம் என்றும் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (அ-ம-22)

## கணவன் இறந்த விரக்தி மனைவியும் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், ஜன. 25
கணவன் உயிரிழந்ததால் மனமுடைந்த மனைவியும் உயிரிழந்தார். இந்தச் சம்பவம் மட்டுவில் தெற்கில் நேற்று இடம்பெற்றது.
இளைப்பாறிய அதிபரான க.துரைரத்தினம் என்பவர் கடந்த மாதம் 20ஆம் திகதி சுகவீனம் காரணமாக உயிரிழந்தார். அவரின் மறைவையடுத்து மேற்படி நபரின் மனைவியான து.பாக்கியம் மிகுந்த மனவுளைச்சலுக்கு உள்ளாகியிருந்தார். இந்த நிலையில் நேற்று அவர் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-9)

# யாழ். மாநகர முதல்வர் தெரிவு; எதிர்த்து நீதிமன்றில் வழக்கு!


**யாழ்ப்பாணம், ஜன. 25**
**யாழ்ப்பாணம் மாநகர முதல்வராக இம்மானுவேல் ஆர்னோல்ட் தெரிவு செய்யப்பட்டமைக்கு எதிராக யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் நேற்று வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் மாநகரசபை உறுப்பினர் வ.பார்த்திபன் சார்பாக சட்டத்தரணி ந.குமரகுருபரன் இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளார்.**

2023ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் இரு தடவைகள் சபையில் தோற்கடிக்கப்பட்டதை அடுத்து யாழ்ப்பாணம் மாநகர முதல்வராகப் பதவிவகித்த வி.மணிவண்ணன் கடந்த 31ஆம் திகதி அந்தப் பதவியில் இருந்து விலகினார்.
அதன்பின்னர் இடைக்கால முதல்வரைத் தெரிவு செய்வதற்கான அமர்வு கடந்த 19ஆம் திகதி நடைபெற்றது. யாழ்ப்பாணம் மாநகரசபையில் 45 உறுப்பினர்கள் அங்கம் வகிக்கும் நிலையில், அந்த அமர்வுக்கு 24 உறுப்பினர்கள் வந்திருந்தனர்.
அமர்வில் உள்ளூராட்சி ஆணையாளர் செ.பிரணவநாதனால் முதல்வருக்கான முன்மொழிவுகள் கோரப்பட்டன. தமிழரசுக் கட்சியின் சார்பில் முன்னாள் முதல்வர் இம்மானுவேல் ஆர்னோல்ட் முன்மொழியப்பட்டார். அதற்கு ஆட்சேபனை தெரிவித்து ஈ.பி.டி.பி. கட்சியின் உறுப்பினர் எம்.ரெமீடியஸ் சபையில் இருந்து வெளியேறினார். அகில இலங்கைத்தமிழ்க் காங்கிரஸ் கட்சியை சேர்ந்த மூன்று உறுப்பினர்களும் சபையை விட்டு வெளியேறினர். அதன்பின்னர், இடைக்கால முதல்வர் பதவிக்கான தெரிவை தொடர்ந்து நடத்துவதற்கு கோரம் இல்லை என்று தெரிவித்து உள்ளூராட்சி ஆணையாளர் அமர்வை ஒத்திவைத்தார்.
எனினும், உள்ளூர் அதிகார சபைகள் மற்றும் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின்படி யாழ். மாநகரசபையின் புதிய மேயராக இம்மானுவேல் ஆர்னோல்ட் தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்று கடந்த 20ஆம் திகதி வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டது. அதையடுத்து ஆர்னோல்ட் முதல்வராகப் பதவியேற்றார். இந்த நிலையிலேயே யாழ்ப்பாணம் மாநகரசபை முதல்வராக இம்மானுவேல் ஆர்னோல்ட் தெரிவு செய்யப்பட்டமைக்கு எதிராக நேற்று வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
முதல்வர் தெரிவு இடைநிறுத்தப்பட்ட நிலையில், ஆர்னோல்ட் முதல்வராக அறிவிக்கப்பட்டமை தவறு என்றும், கூட்டம் தொடர்ந்து நடைபெற்றிருந்தால் வேறு எவரேனும் முதல்வர் தெரிவுக்குப் போட்டியிட்டிருக்கலாம் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்படும் திகதி நீதிமன்றத்தால் பெரும்பாலும் இன்று அறிவிக்கப்படும் என்று அறிய முடிகின்றது. (அ-ம-26-66)

## வடக்கு அமைச்சுகளுக்கு புதிதாகச் செயலாளர்கள்!

வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் புதிய செயலாளராக அ.உமாமகேஸ்வரன் எதிர்வரும் முதலாம் திகதி கடமைகளைப் பொறுப்பேற்கவுள்ளார்.
வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளராகக் கடமையாற்றி வரும் வரதீஸ்வரன் விவசாய அமைச்சின் செயலாளராக எதிர்வரும் முதலாம் திகதி கடமைகளைப் பொறுப்பேற்கவுள்ளார். (அ-ம-27)







## திமிங்கிலத்தின் ‘அம்பருடன்’ முல்லையில் ஒருவர் கைது

முல்லைத்தீவு - கொக்கிளாய்ப் பகுதியில், திமிங்கிலத்தில் இருந்து எடுக்கப்படும் அம்பர் எனப்படும் விலையுயர்ந்த ஒருவகைப் பதார்த்தத்துடன் நபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.
முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்கிளாய் - முகத்துவாரம் பகுதியில் உள்ள வீடொன்றில் அம்பர் இருப்பதாகக் கிடைத்த தகவலுக்கு அமைய முல்லைத்தீவு விசேட அதிரடிப்படையினரின் உதவியுடன் முல்லைத்தீவு வன உயிரிகள் திணைக்களத்தினர் மேற்கொண்ட சிறப்புச் சுற்றிவளைப்பிலேயே மேற்படி நபர் கைதுசெய்யப்பட்டார். அவர் முல்லைத்தீவு நீதிமன்றத்தில் நேற்று முற்படுத்தப்பட்டார். சந்தேகநபர் குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து அவர் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான சரீரப்பிணையில் விடுவிக்கப்பட்டார்.
அம்பர் எனப்படும் இந்தப் பதார்த்தம் திமிங்கிலத்தின் குடல் பகுதியில் உற்பத்தியாகும் அரிதான பதார்த்தம் என்றும் மிகவும் பெறுமதி வாய்ந்த அதை உடைமையில் வைத்திருப்பது சட்டவிரோதம் என்றும் வன உயிரிகள் திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர். (ம-19)

### மாற்றுத்திறனாளிப் பெண்ணுக்கு பாலியல் துன்புறுத்தல்

# மனித உரிமைகள் ஆணைக்குழு பொலிஸாரிடம் விளக்கம் கோரியது

யாழ்ப்பாணம், ஜன. 25
மாற்றுத்திறனாளிப் பெண்ணுக்குப் பாலியல் துன்புறுத்தல் கொடுத்த விவகாரத்தில், இதுவரை விசாரணைகள் முன்னெடுக்கப்படாத நிலையில் இது விடயத்தில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு வட்டுக்கோட்டை பொலிஸாரிடம் விளக்கம் கோரி கடிதம் அனுப்பியுள்ளது.
கடந்த 18ஆம் திகதி குறித்த பெண் வீட்டில் தனித்திருந்த சமயத்தில் வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்த இரண்டு பேர் அவருக்குப் பாலியல் துன்புறுத்தல் கொடுத்துள்ளனர். இதன்போது அந்தப் பெண் கூக்குரல் எழுப்பியதை அடுத்து சந்தேகநபர்கள் இருவரும் தப்பியோடியுள்ளனர். சந்தேகநபர்கள் இனங்காணப்பட்டுள்ளபோதிலும் இது வரை எவரும் கைதுசெய்யப்படவில்லை என்று பாதிக்கப்பட்ட தரப்பினர் அதிருப்தி தெரிவித்தனர்.
இது தொடர்பில் உதயனில் நேற்று செய்தி வெளியானதை அடுத்து, இந்த விவகாரத்தில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாமை ஏன்? என்றுகோரி வட்டுக்கோட்டை பொலிஸாருக்கு கடிதம் அனுப்பியுள்ளது மனித உரிமைகள் ஆணைக்குழு. (அ-ம-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் நிதி தொடர்பில் நிதியமைச்சு மௌனம்!

## கடிதம் அனுப்பியது தேர்தல்கள் ஆணைக்குழு

கொழும்பு, ஜன.25

**உள்ளூராட்சிசபைத் தேர்தலுக்கான நடவடிக்கைகள் அனைத்தும் தேர்தல்கள் ஆணைக்குழுவால் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், தேர்தலுக்கான நிதி தொடர்பில் நிதி அமைச்சு மௌனம் சாதித்து வருகின்றது என்று தெரியவருகின்றது.**

நிதி அமைச்சு தேர்தலுக்கான நிதி தொடர்பில் சரியான பதிலை இது வரை வழங்காத நிலையில், தேர்தல் நடத்த நிதி வழங்கப்படுமா? இல்லையா? என்பது தொடர்பில் தெளிவுபடுத்தவேண்டும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு நிதிய மைச்சுக்கு கடிதம் ஒன்றை அனுப் பியுள்ளது.

உள்ளூராட்சிச்சபைத் தேர்தலை நடத்துவதற்கு முழுமையான நிதி கிடைக்காவிட்டால் தேர்தலை நடத்த முடியாமல் போகும் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் அதிகாரிகள் தெரிவித்தனர் என சிங்கள நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அதில் மேலும் உள்ளதாவது:-

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான செலவு 10 பில்லியன் ரூபா என மதிப்பிடப் பட்டுள்ளது.

கடந்த மாதம் 2 கோடியே 50 லட் சம் ரூபா தேர்தல் செலவுக்காக நிதி அமைச்சால் தேர்தல்கள் ஆணைக் குழுவுக்கு வழங்கப்பட்டது.

இந்த நிதியை வைத்தே தேர்த லுக்கான ஆரம்பக்கட்ட நடவடிக் கையை தேர்தல்கள் ஆணைக் குழு மேற்கொண்டுள்ளது.

இந்த நிலையில் தேர்தலுக்கான எஞ்சிய தொகையை கோரி நிதி அமைச்சின் செயலாளருக்கு தேர் தல்கள் ஆணைக்குழுவின் தவிசா ளரால் நேற்றுமுன்தினம் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டது.

உள்ளூராட்சிசபைத் தேர்தல் நடத்தப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா உயர் நீதிமன்றத்துக்குத் தெரிவித் துள்ளார்.

அதேவேளை தேர்தல் நடந்தால் பணவீக்கம் அதிகரிக்கும் இது மக்களையே பாதிக்கும். தேர்தலுக் குப் பணம் அச்சடித்தே வழங்க நேரிடும். தேர்தலை நடத்த இது சரியான தருணமா? என நிதி அமைச்சின் செயலாளர் உயர் நீதி மன்றத்துக்கு அறிவித்துள்ளார். (ச-44)

# முட்டைக்கும் விலைச் சூத்திரம்

கொழும்பு, ஜன. 25

நுகர்வோர் அதிகாரசபை மற்றும் கால்நடை உற்பத்தி, சுகாதாரத் திணைக்களம் என்பன இணைந்து முட்டைக்கான விலைச் சூத்திரத்தை தயாரித்துள்ளன.

அண்மையில் கோப் குழுவில் மேற்கொள் ளப்பட்ட தீர்மானத்துக்கு அமைய விலைச் சூத்திரம் தயாரிக்கப்பட்டுள்ளது என்று கால் நடை உற்பத்தி, சுகாதாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் ஹேமாலி கொத்தலாவல தெரி வித்துள்ளார். தயாரிக்கப்பட்ட விலைச் சூத்திரம் கோப் குழுவில் எதிர்வரும் நாள்களில் முன் வைக்கப்படும். அதன் பின்னரே முட்டைக்கான விலை தீர்மானிக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை நுகர்வோர் விவகாரசபையால் முட்டை விலை தொடர்பான புதிய வர்த்தமானி அண்மையில் வெளியிடப்பட்டிருந்தது. அதில் வெள்ளை முட்டை 44 ரூபாவாகவும் சிவப்பு முட்டை 46 ரூபாவாகவும் நிர்ணயிக்கப்பட்டது. (எ-14-இ)

# நீதிமன்ற அவமதிப்பு பிரசன்னவுக்கு சிறை

கொழும்பு, ஜன. 25

நீதிமன்றத்தை அவமதித்த குற்றத்துக்காக ஓய்வு பெற்ற இராணுவ மேஜர் சட்டத்தரணி அஜித் பிரசன்னவுக்கு நான்கு வருட கடூழியச் சிறைத்தண்டனை விதித்து மூவரடங்கிய உச்ச நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பளித்தது.

குற்றவாளிக்கு 3 இலட்சம் ரூபா அபராதம் விதித்த நீதிபதிகள், அபராதத்தை செலுத்தத் தவறினால் மேலும் 6 மாதம் சிறை தண்டனை விதிக்கப்படும் என்றும் உத்தரவில் தெரிவித்துள்ளனர். இந்தத் தீர்ப்பை 3 நீதிபதிகள் கொண்ட உச்சநீதிமன்ற அமர்வு அறிவித்துள்ளது.

நீதிமன்ற அவமதிப்பு மற்றும் சாட்சிகளை மிரட்டிய குற்றச்சாட்டுத் தொடர்பில் கைது செய்யப்பட்ட அஜித் பிரசன்ன 2021ஆம் ஆண்டு ஜனவரியில் மேல்முறையீட்டு நீதிமன்றத்தால் தலா 5 லட்சம் ரூபா பெறுமதி கொண்ட இரண்டு சரீரப் பிணைகளில் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தார்.

கொழும்பில் 11 தமிழ் இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமல் போன சம்பவம் தொடர்பில் கடற்படை அதிகாரிகளுக்கு எதிரான வழக்கில் அஜித் பிரசன்ன மற்றும் 2 கடற்படை புலனாய்வு அதிகாரிகள், ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்தி சாட்சிகளை மிரட்டினர் என்று குற்றம் சுமத்தப்பட்டிருந்தது. (எ-இ)

# உள்ளூராட்சித் தேர்தல் விரைவில் வர்த்தமானி

கொழும்பு, ஜன. 25

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் அதுதொடர்பான வர்த்தமானி அச்சிடப்படவுள்ளது எனத் தேர்தல்கள் ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் மார்ச் 9ஆம் திகதி நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. தேர்தலுக்கான திகதியை வெளியிடும் வர்த்தமானி இதுவரை வெளியிடப்படவில்லை.

இந்தநிலையில் உள்ளூராட்சி மன்றங்களின் எண்ணிக்கை, போட்டியிடும் வேட்பாளர்களின் எண்ணிக்கை, கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் போன்றவை வர்த்தமானியில் உள்ளடக்கப்படும்.

உள்ளூராட்சித் தேர்தல் திகதியை தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களின் அடிப்படையில் மாவட்ட தேர்தல் அலுவலர்கள் முடிவு செய்வார்கள் என தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. (ச-இ)

# சவால்களை எதிர்நோக்கும் வல்லமை கட்சிக்கு உண்டு!

## தேர்தல் களத்தில் குதித்த பஸில் தெரிவிப்பு

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலை எதிர்கொள்ள புதிய கூட்டணிகள் உருவாகியுள்ளமை தேர்தலில் சவாலாக அமையும். அந்தச் சவால்களை எதிர் கொள்ளக்கூடிய வல்லமை எமது கட்சிக்கு உண்டு. இவ்வாறு பொதுஜன பெரமுன கட்சியின் ஸ்தாபகரும் தேசிய அமைப்பாளருமான பஸில் ராஜபக்ச தெரிவித்தார்.

கட்சியின் தேர்தல் கள நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்காக அவர் நேற்றுமுன்தினம் கண்டி தலதாமாளிகைக்கு சென்று வழிபாடுகளில் ஈடுபட்டார்.

அதன்பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

252 சபைகளுக்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மொட்டு சின்னத்தில் போட்டியிடுகின்றது. யாழ்ப்பாணத்தில் வீணை சின்னத்தில் போட்டியிடுகின்றோம். மட்டக்களப்பில் கப்பல் சின்னத்திலும் குதிரைச் சின்னத்திலும் களமிறங்குகின்றோம்.

அரசியல் என்பது சவால் மிக்கதுதான். ஆனால் அதை நாம் எதிர்கொள்ள வேண்டும். தேர்தல் முடிவு எவ்வாறு அமையும் என்பது மக்களின் கைகளிலேயே உள்ளதுஎன்றார். (ச44)

# யாழ்.போதனா மருத்துவமனையில் கறுப்புப் பட்டியுடன் அரசுக்கு எதிர்ப்பு


யாழ்ப்பாணம், ஜன. 25

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து அரசாங்கத்துக்கு எதிராக யாழ்.போதனா மருத்துவமனை மருத்துவர்கள் கறுப்புப்பட்டி அணிந்து நேற்று செவ்வாய்க்கிழமை கடமையில் ஈடுபட்டனர்.

அரச மருத்துவ அதிகாரிகளின் சங்கத்தால் முன்னெடுக்கப்படுகின்ற கறுப்பு வாரத்தின் முதல் நாளான நேற்று இந்த எதிர்ப்பு முன்னெடுக்கப்பட்டது.

அரச மருத்துவமனைகளில் தொடரும் மருந்துத் தட்டுப்பாடு, சத்திர சிகிச்சை உபகரணங்களுக்கான தட்டுப்பாடு என்பவற்றை நிவர்த்தி செய்து வளங்களை சீரான முறையில் வழங்கவேண்டும் என்று கோரியும், முறையற்ற விதத்தில் தன்னிச்சையாக வரி என்ற போர்வையில் அரசால் பறிமுதல் செய்யப்படும் சம்பளத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாகவும் அனைத்து அரச மருத்துவமனைகளிலும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அதன் ஒரு பகுதியாக மருத்துவர்கள் கறுப்புப் பட்டி அணிந்து கடமையில் ஈடுபட்டு தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

அத்துடன் நாளை வியாழக்கிழமை வடமாகாணம் முழுவதையும் ஒருங்கிணைத்து அரசாங்கத்தால் நிர்வகிக்கத் தவறிய மருந்துப் பொருள்களுக்கான முறையற்ற வழங்குதலுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக மருத்துவமனைக்கு வரும் பொதுமக்களிடம் கையெழுத்துப் பெறும் போராட்டமும் முன்னெடுக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (எ-14-26-20)



# ஆற்றில் கவிழ்ந்த பெற்றோல் பவுஸர்

கொழும்பு, ஜன.25

எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு எரிபொருளை விநியோகித்து விட்டு கொழும்பு நோக்கி பயணித்த எரிபொருள் பவுஸர் ஒன்று புத்தளத்தில் பாலமொன்றுடன் மோதி விபத்துக்குள்ளாகி பத்துலு ஓயாவில் கவிழ்ந்துள்ளது.

நேற்று அதிகாலை 3.30 மணியளவில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. சாரதிக்கு ஏற்பட்ட நித்திரை கலக்கமே விபத்துக்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஓயாவில் கவிழ்ந்த பவுஸர் 60 மீற்றர் தூரம் வரை நீரில் அடித்துச்செல்லப்பட்டுள்ளது. பிரதேசவாசிகளால் பவுஸர் சாரதி காப்பாற்றப்பட்டு சிலாபம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெற்செய்கைகளில் திடீர் நோய் தாக்கம்

## விவசாயிகளுக்கு எச்சரிக்கை



மன்னார், ஜன. 25

தற்பொழுது நெற்பயிர்களுக்கு நோய் ஏற்படும் அபாயம் தோன்றியுள்ளதால் விவசாயிகள் எச்சரிக்கையாக இருக்கவேண்டும் என்று மன்னார் மாவட்ட விவசாயப் பணிப்பாளர் ஷகிலா பானு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

அண்மைக்காலமாக வயல்களில் மஞ்சள் நிறமாதல் நோய் காணப்படுகின்றது. பனிப்பூச்சி அல்லது கபிலநிறப்புள்ளி நோய் அல்லது வேர் முடிச்சு வட்ட நோய் ஆகிய வற்றின் தாக்கமே இதற்குக் காரணம் என அறிய முடிகின்றது.

வேர்முடிச்சு வட்டப்புழு இவ்வளவு காலமும் மரக்கறி மற்றும் மேட்டுப் பயிர்ச்செய்கையிலேயே தாக்கத்தை ஏற்படுத்தியது. ஆனால் இது தற்போது நெற்பயிர்களிலும் தாக்கத்தை ஏற்படுத்தத் தொடங்கியுள்ளது. இதன் தாக்கம் வயல் மஞ்சள் நிறமாக மாறிவிடும். கபில நிறப்புள்ளி நோய் ஏற்பட்டால் வட்டப்புழுத் தாக்கம் இருப்பதாகக் கருதலாம். வட்டப்புழு நீர்ப்பாசனம் செய்யப்பட்ட அல்லது வெள்ளப்படுத்திய நீரிலேயே அதிகமாகக் காணப்படுகின்றது.

வயல்களுக்கு நீர்ப்பாசனம் செய்யப்படும்போது தனித்தனி வயலாக நீர்ப்பாசனம் செய்யப்பட வேண்டும். அத்துடன் ஒரு வயலில் பாவிக்கப்படும் உபகரணங்கள் மற்றைய வயலுக்கு சுத்தம் செய்த பின்பே மீண்டும் பாவிக்கப்படவேண்டும். விவசாயிகளும் சுத்தமாக இருக்கவேண்டும்.

பரிந்துரைக்கப்பட்ட சமநிலையான பசளைகள் பாவிக்கப்பட வேண்டும். பசளைகள் கூடுதலாகவோ அல்லது குறைவாகப் பாவித்தாலும் வயலுக்கு பாதிப்புக்கள் ஏற்படும். வயல்களில் மேற்கூறப்பட்ட தாக்கங்கள் ஏற்பட்டால் விவசாயிகள் உடனடியாக அயலிலுள்ள விவசாயப் போதனாசிரியர்களை நாடவேண்டும். அல்லது என்னுடன் தொடர்பை ஏற்படுத்திக்கொள்ளுங்கள் - என்றார்.

(எ-14,60)



## நியாயவிலையில் நெல்லை கொள்வனவு செய்யவேண்டும்

### விவசாயிகள் வேண்டுகோள்

கிளிநொச்சி, ஜன. 25

நெல்லுக்கு உரிய விலை கிடைக்கவில்லை. இந்த நிலையில், உலர்த்துவதற்கு இடமின்றி வீதியில் உலர விடப்பட்ட நெல்லும் திடீர் மழையால் நனைந்துள்ளது. விவசாயிகளின் கஸ்டத்தை உணர்ந்து அரசாங்கம் விரைவாக நெல்லுக்கு உரிய விலை கொடுத்துக் கொள்வனவு செய்யவேண்டும் என்று குஞ்சுப்பரந்தன் விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

தற்போது கிளிநொச்சி மாவட்டத்தில் காலபோக நெல் அறுவடை ஆரம்பித்திருக்கின்றது. எனினும் நெல்லுக்குரிய நியாய விலை கிடைக்காமையால் அறுவடை செய்கின்ற நெல்லை விவசாயிகள் வீதிகளில் உலர விடுகின்றனர்.

இந்த நிலையில் குஞ்சுப்பரந்தன் விவசாயிகள் பூநகரி - பரந்தன் வீதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நெல்லை உலரவிட்டுள்ளனர். அன்று இரவு பெய்த மழையால் நெல் அனைத்தும் நனைந்துள்ளது.

அரசாங்கம் நெல்லை உரிய விலையில் கொள்வனவு செய்ய விரைவாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(எ-14,316)

## சங்காபிஷேகம்

கொடிகாமம், ஜன 25

வரணி தான்தோன்றி கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த மணவாளக் கோலத்தின 108 சங்காபிஷேகம் எதிர்வரும் மாதம் 6ஆம் திகதி திங்கட்கிழமை மன்னன்குறிச்சி சங்காபிஷேக பிரதமகுரு குமார வித்தக ஜோதி சிவசிறீ தில்லையம்பலக் குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளது.

(ய-159)

## விவசாயிகளுக்கு விரைவில் அறுவடைக்கான எரிபொருள்

### முல்லை. மாவட்டச் செயலர் உறுதி

முல்லைத்தீவு, ஜன. 25

காலபோக நெல் அறுவடைக்கான எரிபொருள் விரைவாக பெற்றுக் கொடுக்கப்படும் என்று முல்லைத்தீவு மாவட்டச் செயலர் க.விமலநாதன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் தற்போது நெல் அறுவடை ஆரம்பமாகியுள்ள நிலையில் அறுவடைக்கான எரிபொருளைப் பெற்றுக் கொள்வதில் விவசாயிகள் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர். இது தொடர்பாக முல்லைத்தீவு மாவட்டச் செயலரிடம் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எரிபொருள் தொடர்பான விவரங்கள் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. விரைவில் எரிபொருள் வந்து சேரும். அதனை விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்கவுள்ளோம் - என்றார்.

இதேவேளை அறுவடையைத் தொடங்கியுள்ள விவசாயிகளுக்கு தமக்கான எரிபொருளை கூடுதலான விலையில் வாங்க வேண்டிய நிலைமை உருவாகியுள்ளது. அத்துடன் எரிபொருளை அனைத்து விவசாயிகளும் பெற்றுக்கொள்ள முடியாத நிலைமையும் காணப்படுகின்றது.

எனவே அறுவடைக்கான எரிபொருளை விரைவாகப் பெற்றுத்தர வேண்டும் என்று குமுழமுனை பிரதேசத்தில் அறுவடையில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் உட்பட ஏனைய விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(எ-14,13)

## குமுழமுனைக்கு பஸ் சேவை ஆரம்பிக்குமாறு கோரிக்கை

முல்லைத்தீவு குமுழமுனை கிராமத்துக்கு பேருந்து சேவைகளை அதிகரிக்க வேண்டும் என்று இலங்கை போக்குவரத்து சபையின் வட பிராந்திய முகாமையாளரிடம் குமுழமுனை கிராம அபிவிருத்திச் சங்கம் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளது.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

எமது கிராமத்துக்கான இலங்கை போக்குவரத்து சபை, தனியார் பேருந்து சேவை என்பன நடைபெற்றன. தற்போது இந்தச் சேவைகள் ஒரு வருடத்துக்கு மேலாக நடைபெறுவதில்லை.

அனைத்துச் சேவைகளுக்காகவும் கிராம மக்கள் முல்லைத்தீவு, தண்ணிரூற்று போன்ற இடங்களுக்கு செல்ல வேண்டி உள்ளதால் தாங்கள் எமது கிராமத்துக்கான பேருந்து சேவைகளை நடத்தவேண்டும் என்று கோருகின்றோம் - என்றுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கரைதுறைப்பற்றின் குமுழமுனை, தண்ணிமுறிப்பு, ஆறுமுகத்தான் கிராமங்களில் வாழ்கின்ற ஆயிரத்து 500 வரையான குடும்பங்கள் தொடர்ச்சியான போக்குவரத்து நெருக்கடிகளை எதிர்கொள்கின்றனர் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

(எ-113)

## கஞ்சாவுடன் ஒருவர் மாதகலில் கைது

யாழ்ப்பாணம், ஜன. 25

இளவாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாதகல் பகுதியில் 700 கிராம் கஞ்சாவுடன் இளைஞர் ஒருவர் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இளவாலை பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய இந்தக் கைது இடம்பெற்றது.

சந்தேகநபரின் வீட்டை சோதனைக்குட்படுத்திய போதே 700 கிராம் கஞ்சா மீட்கப்பட்டது என பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபருக்கு எதிராக வழக்குப் பதிவு செய்து மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

(ச-125)

## அபிவிருத்தி அலுவலருக்கு முகாமைத்துவ போட்டிகள்

சாவகச்சேரி, ஜன. 25

பிரதேச செயலகங்களில் பணியாற்றும் அபிவிருத்தி அலுவலர்களின் அலுவலக செயற்பாடுகள் தொடர்பான முகாமைத்துவப் போட்டிகள் இந்த வருடம் முதன்முறையாக நடத்தப்படுகிறது.

அலுவலக செயற்பாடுகள் தொடர்பான புள்ளியிடும் பணிகள், உதவிப் பிரதேசசெயலர் மற்றும் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ஆகியோர் தலைமையிலான குழுக்கள் மேற்கொண்டு வருகின்றன.

இதுவரை காலமும் கிராம அலுவலர் அலுவலகங்களிடையே நடத்தப்பட்டு வந்த முகாமைத்துவப் போட்டி இந்த வருடம் தொடக்கம் அபிவிருத்தி அலுவலர் அலுவலகங்களுக்கும் நடத்தப்படுகின்றது. போட்டிகளின் புள்ளிகள் பிரதேச, மாவட்ட, மாகாண, தேசிய நிலைகளில் தெரிவு செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(எ-14,9)

## சட்டவிரோத மின்னிணைப்பு புங்குடுதீவில் ஒருவர் கைது!

யாழ்ப்பாணம், ஜன. 25

புங்குடுதீவு ஏழாம் வட்டாரப் பகுதியில், வீட்டிலிருந்து பிறிதொரு வீட்டுக்கு சட்டவிரோதமான முறையில் மின் இணைப்பை வழங்கிய நபர் கைது செய்யப்பட்டார் என்று ஊர்காவற்றுறைப் பொலிஸார் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை தெரிவித்தனர்.

மின்சார சபைக்குச் சொந்தமான மின்மானியை சேதப்படுத்தி, வீட்டிலிருந்து நபரொருவர் அயல் வீட்டுக்கு மின்சாரத்தை வழங்கி வந்துள்ளார்.

இது தொடர்பில் ஊர்காவற்றுறைப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமைய சந்தேகநபர் கைது செய்யப்பட்டார். மேலதிக விசாரணைகளின் பின்னர் கைது செய்யப்பட்ட நபரை ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் ஊர்காவற்றுறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

(எ-14, 23)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## குற்றங்களின் பின்னால்......!

ஒரு காலத்தில் தமிழர் கலாசாரத்தின் எடுத்துக் காட்டாக இருந்த யாழ்ப்பாணத்தின் நிலைமை இப்போது தலைகீழாக மாறியிருக்கின்றது. வன்முறைகளும், போதைப் பொருள்களும் மலிந்த இடமாக மாறியிருக்கின்றது. குடாநாடு முழுவதும் இலங்கையின் பாதுகாப்புத் தரப்பினர் குவிக்கப்பட்டிருக்கும் நிலையிலேயே இந்த மாற்றம் ஏற்பட்டிருக்கின்றது. யாழ்ப்பாணத்தில் அண்மைக்காலமாக வாள்வெட்டுக்கள் என்பது சர்வ சாதாரண நிகழ்வுகளாக மாறியிருக்கின்றன. பட்டப்பகலில் குற்றங்களைச் செய்துவிட்டு, குற்றவாளிகள் சாவகாசமாகத் தப்பிச் செல்கின்றனர். இதற்கு எடுத்துக் காட்டாக சுன்னாகத்தில் நேற்றுப் பட்டப்பகலில் அப்படியான சம்பவம் ஒன்று நடந்திருக்கின்றது.

பலரும் பார்த்திருக்க சனநெருக்கடி மிக்க நேரத்தில் சம்பவ இடத்துக்கு அண்மித்த பகுதியில் பொலிஸார் கடமையில் இருக்கும்போது சினிமாப்பாணியில் குற்றம் நிகழ்த்தப்பட்டிருக்கின்றது. வாள்வெட்டு நடத்தியவர்கள் தப்பித்தும் சென்றிருக்கின்றனர். குற்றவாளிகளைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என்கின்றது பொலிஸ் தரப்பு. நேற்று மட்டுமல்ல இப்படியான சம்பவங்கள் முன்னரும் பல தடவைகள் நடந்திருக்கின்றன. வன்முறைக் கும்பல்களிடையிலான உப்புச் சப்பில்லாத பிரச்சினைகளின் நீட்சியாகவே இப்படியான சம்பவங்கள் நடக்கின்றன. பொதுமக்களின் இயல்பு வாழ்க்கையை, நிம்மதியைக் குலைக்கும் இந்தக் குற்றங்கள் எந்தத் துணிவில் எந்தப் பின்னணியில் நிகழ்த்தப்படுகின்றன என்பதே மக்களின் மனங்களில் உள்ள கேள்வி.


தமிழர் பகுதிகளில் தலைவிரித்தாடும் வன்முறைச் சம்பவங்களுக்கு, நாட்டின் பாதுகாப்புத் தரப்பினரின் அனுசரணையும் இருக்கின்றது என்பது தமிழ் மக்களின் குற்றச்சாட்டு. பெரும் எண்ணிக்கையில் பாதுகாப்புத் தரப்பினர் குவிக்கப்பட்டிருக்கும் நிலையிலும், அரச புலனாய்வுப் பிரிவினரின் கழுகுப் பார்வை தமிழர் பகுதிகளில் பரவியிருக்கும் சமயத்திலும் இவ்வாறான குற்றங்கள் நடப்பதே தமிழ் மக்களின் சந்தேகத்துக்குக் காரணம். தெற்கு அரசியல்வாதிகள் வடக்கே வரும்போதும், தமிழ் மக்கள் நினைவேந்தல்கள், போராட்டங்கள் செய்யும்போதும் விழித்தெழும் பாதுகாப்புத் தரப்புக்கள், குற்றங்கள் நடக்கும் போது கண்டும் காணாது பதுங்கி விடுகின்றன. அவை தங்கள் கடமையைச் சரியாக ஒழுக்கமாகச் செய்யுமானால் குடாநாட்டில் இவ்வாறான குற்றங்கள் நடப்பதற்கும் குற்றக் குழுக்கள் உருவாவதற்கும் எந்தச் சாத்தியமும் இருக்கப் போவதில்லை.

பொதுமக்களைப் பாதுகாப்பதற்காகவே பொலிஸாருக்கும், ஏனையோருக்கும் ஊதியம் வழங்கப்படுகின்றது. அது பொதுமக்களின் பணத்தில் இருந்தே வழங்கப்படுகின்றது. கதிரைகளில் அமர்ந்து அறிக்கைகள் வெளியிடாது இனியாவது உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். பொதுமக்களின் இயல்பு வாழ்க்கைக்கு குந்தகம் விளைவிக்கும் வன்முறைக் குழுக்கள் இரும்புக் கரம்கொண்டு அடக்கப்படவேண்டும். சாதாரண குடிமக்கள் ஒவ்வொருவரினது எதிர்பார்ப்பும் அதுவே.

நாளொரு நல்வார்த்தை

"மன்னித்தல் தண்டித்தலைவிடச் சிறந்தது. ஏனெனில் தண்டித்தல் மிருகத்தனம்; மன்னித்தல் மனித குணம்"

– நெப்போலியன் ஹில்



# மாணவர்கள் நலனுக்காக சிக்கன மின்சாரப் பாவனை

## மக்களிடம் பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு வேண்டுகோள்

கொழும்பு, ஜன. 25

க.பொ.த. உயர்தரப் பரீட்சை எதிர்வரும் மாதம் 17ஆம் திகதி முடிவடையும் வரை மின்பாவனைக்கான கேள்வியை முகாமைத்துவம் செய்ய பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு விசேட அவதானம் செலுத்தியுள்ளது.

இதுதொடர்பில் ஆணைக்குழு வெளியிட்ட அறிக்கையில் உள்ளதாவது:

பரீட்சை இடம்பெறும் காலப்பகுதியில் மின்சாரத்தைத் துண்டிக்க வேண்டாம் என ஆணைக்குழு முன்வைத்த பரிந்துரையை மின்சாரசபை புறக்கணித்துள்ளது.

இந்தநிலையில் பரீட்சை முடிவடையும் வரை மாலை 6 மணிமுதல் இரவு 10 மணிவரையான காலப்பகுதியில் மின்பாவனைக்கான கேள்வியை குறைத்து 350 மெகாவாட் மின்சாரத்தை சேமிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம் மின்வெட்டை குறைக்க எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கு பொதுமக்களும் அரச மற்றும் தனியார் தரப்பினர் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

வீட்டு மின்பாவனையாளர்கள் மாலை 6 மணிமுதல் 9 மணிவரையான காலப்பகுதியில் மின்பாவனைக்கான கேள்வியை 50 சதவீதத்தால் குறைத்துக் கொள்ளவேண்டும்.

அதேபோன்று தனியார் நிறுவனங்களும் இந்தக் காலப்பகுதியில் தமது சேவை நிறுவனங்களின் மின்பாவனையை இயலுமான அளவு குறைத்துக்கொள்ளவேண்டும்,

உள்ளூராட்சிமன்றங்களின் நிர்வாகத்தின் கீழுள்ள வீதி விளக்குகள் மாலை 6 மணி முதல் இரவு 10 மணிவரையான காலப்பகுதியில் அணைக்கவேண்டும்.

பரீட்சார்த்திகளின் நலனை கருத்திற்கொண்டு எதிர்வரும் 17 வரை நாட்டுமக்கள் மின்பாவனை சுருக்கி மின்சாரத்தை சேமித்து வழங்கின் பரீட்சை நாள்கள் முடிவ்டையும் வரை மின்சாரத்தை துண்டிக்காது விநியோகிக்க முடியும் - என்றுள்ளது. (ச-இ)

# இருளில் மூழ்கடிக்கப்படும் மாணவர்களின் எதிர்காலம்

## சஜித் பிரேமதாஸ காட்டம்

கொழும்பு. ஜன. 25

மாணவர்களின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் முக்கியமான உயர்தரப் பரீட்சையின் போது தன்னலம்கருதி அரசாங்கம் மின் தடையை நடைமுறைப்படுத்துவதும் சட்ட விரோத செயற்பாடாகும். இதனால் நாட்டின் எதிர்காலமும் இருளில் மூழ்கியுள்ளது.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் உள்ளதாவது:

பரீட்சை நடைபெறும் நாள்களில் மின்சாரத்தைத் துண்டிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.பிள்ளைகளின் எதிர்காலத்தையும் இருளில் மூழ்கடிக்கும் வகையில் பரீட்சை நாள்களில் மின்சாரம் துண்டிக்கப்படுகிறது. இதனால் நாட்டின் எதிர்காலம் இருளில் மூழ்கியுள்ளது.

எனவே வெட்கக்கேடான முடிவை எடுக்கும் இந்த அரசாங்கம் உடனடியாக வெளியேற்றப்படும். மக்கள் சாபத்தில் இருந்து அரசாங்கம் தப்ப முடியாது- என்றார். (ச-இ)

நாளை 26.01.2023 வியாழக்கிழமை தை 12
சுபநேரம் : 08.06 - 09.36
ராகுகாலம் : 02.06 - 03.36

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலத்திரனியல் முறையில் தண்ணீர் கட்டணப் பட்டியல்

யாழ்ப்பாணம், ஜன. 25

குடிதண்ணீர் கட்டணப்பட்டியல் விரைவில் இலத்திரனியல் முறையில் வழங்கப்படும் என்று தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை அறிவித்துள்ளது.

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை குடிதண்ணீர் இணைப்பைப் பெற்றுள்ள தனது வாடிக்கையாளர்களுக்கு மாதந்தோறும் அச்சிடப்பட்ட பெரியளவிலான தாள்களில் வழங்கி வந்த கட்டணப்பட்டியலை அச்சிடப்பட்ட இயந்திர பிரதியில் உத்தியோக பூர்வ கட்டணப்பட்டியலாக வாடிக்கையாளர்களின் இடங்களில் வைத்து வழங்கப்படவுள்ளது என்று வடிகாலமைப்புச் சபை அறிவித்துள்ளது.

இதற்கு மேலதிகமாக முழுமையான பட்டியலைப்பெற விரும்புகின்ற வாடிக்கையாளர்கள் மின்னஞ்சல் மூலம் ஈ பட்டியலைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

அத்தோடு குறுந்தகவல் மூலமும் கட்டண விவரங்கள் அனுப்பப்படும் என்று தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் யாழ்.பிராந்திய அலுவலகத்தில் பரீட்சார்த்த நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

அதன்போது வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த அனைத்து மாவட்டங்களிலும் நீர்மானி வாசிப்பாளர் மற்றும் அதிகாரிகளுக்கு ஒரு நாள் பயிற்சி அளிக்கப்பட்டது.

அதன்பின்னர் இயந்திர முறையிலான மாதாந்த நீர்க் கட்டணப்பட்டியல் தொடர்பில் வங்கிகள், தபால் நிலையம், நிதி நிறுவனங்கள் மற்றும் கட்டணம் செலுத்தக்கூடிய முகவர்கள் ஆகியோருக்கு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச்சபை உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது. (எ-14,214)

# இன்றைய நாள் (ராசிபலன்)



**மேடம்:** காரியங்கள் அனுகூலமாகும். சகோதரர்கள் வழியில் செலவுகள் ஏற்பட்டாலும், அதனால் மகிழ்ச்சியே உண்டாகும். சிறுசிறு பிரச்சினைகள் ஏற்படக் கூடும்.

**இடபம்:** தேவையான பணம் கையில் இருப்பதால் உற்சாகத்துடன் காணப்படுவீர்கள். முக்கியமான முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும். வியாபாரத்தில் வழக்கமான நிலையே காணப்படும்.

**மிதுனம்:** எதிலும் நிதானமாகச் செயற்படவும். பயணங்களைத் தவிர்ப்பது நல்லது. சிலருக்கு தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். வீண் விவாதம் ஏற்படக்கூடும்.

**கடகம்:** எதிர்பாராத செலவுகள் அதிகரித்தாலும் சமாளிக்கத் தேவையான பணம் கிடைத்துவிடும். உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்காக செலவு செய்ய உற்சாகத்துக்குக் குறைவிருக்காது.

**சிம்மம்:** வரவும் செலவும் அடுத்தடுத்து வந்தாலும் சமாளித்துவிடுவீர்கள். தந்தையின் தேவையை நிறைவேற்றி மகிழும் வாய்ப்பு உண்டாகும். குடும்பத்தினருடன் வெளியிடங்களுக்குச் சென்று வருவீர்கள்.

**கன்னி:** சோர்வு நீங்கி உற்சாகத்துடன் செயற்படுவீர்கள். பிள்ளைகள் பிடிவாதம் பிடித்தாலும், அவர்களை அரவணைத்துச் செல்வது அவசியம். செலவுகள் ஏற்படும்.

**துலாம்:** புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால், பேசும்போது பொறுமை அவசியம். காரியத்தில் தாமதம் ஏற்படக்கூடும்.

**விருச்சிகம்:** ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் உங்கள் யோசனைக்கு முக்கியத்துவம் கிடைக்கும். அந்நியோன்யம் அதிகரிக்கும். கடனுதவி கிடைக்கும்.

**தனுசு:** உற்சாகமான நாள். மனஉறுதியுடன் செயற்படுவீர்கள். தந்தைவழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகும். உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி உண்டாகும்.

**மகரம்:** புதிய முயற்சிகள் எதுவும் வேண்டாம். பிள்ளைகளால் செலவுகள் ஏற் பட்டாலும் அவசியமான செலவுகளாகவே இருக்கும். உணவு விடயத்தில் கவனமாக இருக்கவும்.

**கும்பம்:** தெய்வ அனுகூலம் நிறைந்த நாளாக இருக்கும். உறவினர்கள் வருகையால் வீட்டில் உற்சாகமான சூழ்நிலை காணப்படும். உடல்நலனில் கவனம் தேவை.

**மீனம்:** எதிர்பார்த்த பணம் கிடைப்பதால், செலவுகளைச் சமாளிப்பதில் சிரமம் எதுவும் இருக்காது. ஆதாயம் உண்டாகும். தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள்.

# நிரந்தர நிறுவனமாக ஓ.என்.யு.ஆர் சட்டவரைவைத் தயாரிக்க அனுமதி

யாழ்ப்பாணம், ஜன. 25

தேசிய ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டுக்கான செயலகத்தை (ஓ.என்.யு.ஆர்) நிரந்தர நிறுவனமாக உருவாக்குவதற்கான சட்ட வரைவைத் தயாரிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசின் வாராந்த அமைச்சரவைக் கூட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றபோதே அதற்கு அனுமதி பெறப்பட்டது.

அனைத்துப் பிரஜைகளுக்கும் பொருளாதார, சமூக, கலாசார மற்றும் அரசியல் துறைகளில் சமமான வாய்ப்புக்களை உருவாக்கல், தனித்துவத்தைப் பேணல், பன்மைத்துவத்தைப் பாராட்டுகின்றதும் மதிப்பளிக்கின்றதுமான சமூகத்தை உருவாக்குதல் மற்றும் அனைத்து சமூகங்களும் ஒற்றுமையுடனும் ஒத்துழைப்புடனும் சேர்ந்து வாழக்கூடிய சமூகமொன்றை உருவாக்கும் நோக்கில் தேசிய ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டுக்கான செயலகம் உருவாக்கப்பட்டுள்ளது.

ஓ.என்.யு.ஆர் நிறுவன தொழிற்பாடுகளை விரிவாக்கம் செய்வதற்கு சட்டமொன்றின் மூலம் நிரந்தர நிறுவனமாக உருவாக்குவது பொருத்தமானதென இனங்காணப்பட்டது.

அதற்கான சட்ட வரைவை தயாரிப்பதற்கு சட்ட வரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்காக நீதி சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. (எ-14,44)



# போட்டிபோட்டு ஓடிய பேருந்துகள் விபத்து

## மோ.சைக்கிளில் பயணித்தவர் காயம்

வவுனியா, ஜன. 25

வவுனியாவில் மூன்று வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்து சம்பவம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை வவுனியா பழைய பேருந்து நிலையம் அருகில் நிகழ்ந்துள்ளது.

வவுனியா புதிய பேருந்து நிலையத்திலிருந்து புறப்பட்ட பேருந்தும் வவுனியா - கொழும்பு வழித்தடத்தில் பயணித்த தனியார் பேருந்தும் போட்டிபோட்டு பயணித்துள்ளன. இதன்போது கண்டி பிரதான வீதிக்குள் மோட்டார் சைக்கிளொன்று நுழைய முற்பட்ட வேளை தனியார் பேருந்து சடுதியாக நிறுத்தியுள்ளது.

இதன்போது வேகமாக வந்த மற்றைய பேருந்து நிறுத்தப்பட்ட பேருந்துடன் மோதுண்டு மோட்டார் சைக்கிளையும் மோதித் தள்ளி விபத்தை ஏற்படுத்தியது.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த பெண் காயங்களுக்குள்ளான நிலையில் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுளார்.

விபத்து தொடர்பில் வவுனியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-18)

# பரீட்சை எழுதச் சென்ற மாணவி மீது அசிட் வீச்சு

## கேகாலையில் சம்பவம்

கொழும்பு, ஜன. 25

உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு சென்ற மாணவி மீது அவரது காதலன் எனக் கூறப்படும் இளைஞர் ஒருவர் அசிட் வீசித் தாக்குதல் நடத்தியுள்ளார்.

இந்தச் சம்பவம் கேகாலையில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது.


உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக முச்சக்கரவண்டியில் தனது தந்தையுடன் பரீட்சை நிலையத்துக்கு சென்று கொண்டிருந்தபோது இந்த அசிட் வீச்சுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதில் மாணவி, அவரது தந்தை மற்றும் குறித்த இளைஞன் ஆகியோர் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

குறித்த இளைஞனுடனான காதலை முறிக்க முற்பட்டதால் மாணவி மீது அசிட் வீச்சு நடத்த முயற்சித்துள்ளார் என பொலிஸார் [illegible] படுகிறது. [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதன் பொய்கை





"ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும்வாய் எல்லாஞ் செயல்" -வள்ளுவர்

நேர்கண்டவர்- பு.கஜிந்தன்



# தமிழ் இசைக்கலைஞர்களுக்கு உரிய மதிப்பு கிடைப்பதில்லை

**"இலங்கையில் தமிழ் இசைக்கலைஞர்களுக்கு உரிய அந்தஸ்தும் மரியாதையும் வழங்கப்படுவதில்லை. இந்த நிலை மாற்றம்பெற வேண்டும். அத்துடன், இசைக்கலைஞர்களின் கொடுப்பனவுகள், சலுகைகளில் நிலை பேறான தன்மை பேணப்பட வேண்டும் - இவ்வாறு வலியுறுத்தியுள்ளார் ஒக்ர பாட் இசைக்கலைஞனான பானுதீபன். அவருடனான நேர்காணல் இது."**

# இசைக்கலைஞர் பானுதீபன் ஆதங்கம்



**கேள்வி:** நீங்கள் இசைத்துறையில் உள்நுழைந்தமைக் கான காரணம் என்ன?

**பதில்:** இசைத்துறையில் எனக்கு ஏற்பட்ட ஆர்வமும் என்னை சூழ்ந்திருக்கின்றவர்களின் உற்சாகமும்தான் நான் இசைத்துறையில் உள்நுழைந்ததற்கான காரணம்.

**கேள்வி:** உங்களது பரம்பரை வழியானவர்கள் இசைத் துறை அல்லது இசைத்துறையில் இருந்திருக்கின் றார்களா? அப்படி இருந்திருந்தால் அவர்களைபற்றி கூறுங்கள்.

**பதில்:** எனது தந்தை மற்றும் தாய் ஆகியோரின் பரம்பரை இசைப் பரம்பரை. எனது தந்தை பல தாய கப் பாடல்களுக்கு தபேலா இசைக்கருவி வாசித்த பெருமைக்குரியவர். தபேலா வரதன் என்றால் அனைவருக்கும் அவரைத் தெரியும். எனது மாமா வாசன் சாரங்கா இசைக்குழுவின் இயக்குனர். எனது அப்பப்பா பிள்ளைநாயகம் தோல் கருவிகளை மீட்கக் கூடிய வித்துவான். அவர் தோல் கருவிகளை செய்யும் வல்லமையும் படைத்தவர். எனது பெரியப்பா திருநா வுக்கரசு மிருதங்க வித்துவான். அவர் கலாபூஷணம் விருது பெற்றவர். அம்மாவினுடைய அப்பா வி.கே. ரத்தினம் ஒரு நடிகர். உலகப் புகழ்பெற்ற நடிகைமணி வைரமுத்து எனது மாமா. எனக்கு பானுதீபன் என்று பெயரிட்டதும் அவரே.

**கேள்வி:** நீங்கள் முதன்முதலில் எத்தனை வயதில், எந்த நிகழ்ச்சியில் மேடை ஏறினீர்கள்?

**பதில்:** நான் முதன்முதலாக ஏழு வயதில் காங்கே சன்துறையில் ஒரு மேடை நிகழ்ச்சியில் அப்பாவுடன் இணைந்து தபேலா வாத்தியக் கலைஞராகத்தான் மேடை ஏறினேன்.

### ஒக்ரபாட்டின் தனித்துவம்

**கேள்வி:** இத்தனை இசைக்கருவிகள் இருக்கும்போது நீங்கள் ஒக்ரபாட்டினை தெரிவு செய்ததற்கான காரணம் என்ன?

**பதில்:** தற்காலத்து பாடல்கள் அனைத்திலும் ஒக்ரபாட் வாத்தியத்தின் பங்களிப்பு இன்றியமையாத ஒன்றாகும். ஆரம்பத்தில் நான் பல வருடங்களாக தபேலா இசைக்க ருவி தான் வாசித்துக்கொண்டிருந்தேன். 16 வயதில்தான் எனக்கு இந்த ஒக்ரபாட் வாத்தியம் மீது ஆர்வம் வந்தது.

**கேள்வி:** ஒக்ரபாட்டினைவிட நீங்கள் வேறு ஏதாவது இசைக்கருவிகளும் இசைப்பீர்களா? அப்படியாயின் அவை என்ன இசைக்கருவிகள்?

**பதில்:** ஆம். அனைத்து தாள அல்லது தோல் வாத்தி யங்களும் இசைக்கும் திறமை எனக்கு உள்ளது.

**கேள்வி:** உங்களது குரு யார்? அவரைப் பற்றி கூறுங்கள்

**பதில்:** எனது அப்பாதான் பிரதான குரு. அதன் பின்னர் மிருதங்கத்துக்கு எனது மாமா சுகுணதாசன்தான் குரு. ஆனால் ஒக்ரபாட் இசைக்கருவியை நான் அனைவரை யும் பார்த்தே கற்றுக்கொண்டேன்.

**கேள்வி:** நீங்கள் புலம்பெயர் நாடுகளிலும் இசை நிகழ்ச்சிகள் பலவற்றில் கலந்துகொண்டுள்ளீர்கள். முதன்முதலாக எந்த நாட்டுக்கு சென்று மேடையேறி னீர்கள்? இதுவரை எந்தெந்த நாடுகளில் மேடையேறி யுள்ளீர்கள்?

**பதில்:** முதன்முதலாக நான் 2017ஆம் ஆண்டு இந்தி யாவுக்குச் சென்று அங்கு மேடையேறினேன். அதன் பின்னர் லண்டன், சுவிஸ், நோர்வே, அவுஸ்திரேலியா, இந்தியா, மலேஷியா ஆகிய நாடுகளுக்குச் சென்றுள் ளேன்.

**கேள்வி:** மேடை நிகழ்ச்சிகளில் மட்டும் தான் நீங்கள் பங்குகொள்கின்றீர்களா அல்லது வேறு இசை சார்ந்த செயற்பாடுகளிலும் ஈடுபடுகின்றீர்களா?

**பதில்:** மேடை நிகழ்ச்சிகள் மட்டுமல்ல, நாதஸ்வர கச்சேரி, நாட்டிய நிகழ்ச்சி, வயலின் கச்சேரி, சங்கீதக் கச்சேரி, பஜனை, கர்நாடக இசை நிகழ்ச்சிகள் உள்ளிட்ட செயற்பாடுகளிலும் ஈடுபடுகின்றேன்.

### இசைப்பிரபலங்களுடன் ஒரே மேடையில் சங்கமம்

**கேள்வி:** தென்னிந்திய இசைத்துறை பிரபலங்கள் பலருடன் இசை நிகழ்ச்சியில் இணைந்திருந்தீர்கள். இதுவரை எந்தெந்த பிரபலங்களுடன் இணைந்து இசை நிகழ்ச்சியில் ஈடுபட்டுள்ளீர்கள்?

**பதில்:** பாடும் நிலா எஸ்.பி.பாலசுப்பிரமணியம், தேனிசைத் தென்றல் தேவா, சிவமணி, ஹரிகரன், சித் திரா, உன்னிக்கிருஷ்ணன், உன்னிமேனன், அநுராதா ஸ்ரீராம், மருபாலகிருஷ்ணன், ஹரிணி, ஸ்ரீனிவாஸ், வாணிஜெயராம், இசையமைப்பாளர் பரத்ராஜ், இசை யமைப்பாளர் சிற்பி, இசையமைப்பாளர் தீனா, இசை யமைப்பாளர் ஸ்ரீகாந் தேவா, மகதி, முகேஷ், வி.வி. பிரசன்னா, தேவன், ஸ்ரீராம், அனந்து, வேல்முருகன், சீர்காழி சிவசிதம்பரம் போன்ற பிரபலங்களுடன் நான் மேடையேறியுள்ளேன். உண்மையில் அவர்களுடன் மேடையேறியமை, இசை நிழ்ச்சியிலும் அரங்கேற்றங் களிலும் பங்கேற்றமை ஆசீர்வதிக்கப்பட்ட தருணங்கள்.

**கேள்வி:** ஒக்ரபாட் இசைக்கருவி இசைப்பதை உங் களுடனேயே நிறுத்திவிட்டீர்களா அல்லது அடுத்த தலைமுறைக்கும் எடுத்துச் செல்வதில் பங்களிப்புச் செய்கின்றீர்களா?

**பதில்:** நான் கடந்த ஐந்து வருடங்களாக ஒக்ரபாட் இசை வகுப்புக்களை நடாத்தி வருகின்றேன். இதன்மூலம் பல மாணவர்களை உருவாக்கியுள்ளேன். இந்தக் கலையை பரவலாக்கம் செய்யவேண்டும் என்பதுதான் எனது முக் கியமான இலக்குகளில் ஒன்று.

**கேள்வி:** வளர்ந்துவரும் ஒக்ரபாட் கலைஞர்களுக்கு நீங்கள் என்ன கூற விரும்புகின்றீர்கள்?

**பதில்:** வளர்ந்துவரும் ஒக்ரபாட் கலைஞர்களுக்கு நான் கூறுவது யாதெனின் மிருதங்கம் அல்லது ட்ரம்ஸ் இசைக்கருவியை முறைப்படி பயிலுங்கள். முறைப்படி பயின்றால் நீங்கள் இசைத் துறையில் இன்னமும் பிர காசிக்கலாம்.

**கேள்வி:** இசைத்துறையில் நீங்கள் எதிர்கொள்ளும் சவால்கள் என்ன?

**பதில்:** இலங்கையில் தமிழ் இசைக்கலைஞர்களுக்கு உரிய மரியாதை இன்றுவரை கிடைக்கவில்லை. சகோ தர மொழி கலைஞர்களுக்கு இருக்கின்ற மதிப்பு மற்றும் செல்வாக்கு தமிழ் கலைஞர்களுக்கு இல்லை, தமிழ் இசைக் குழுக்களுக்கும் இல்லை. தமிழ் கலைஞர்களுக் குரிய ஊதியத்தில் இன்னமும் உறுதியான நிலைப்பாடு இல்லை. மேடை இசை கலைஞர்கள்தான் இதனால் அதிகமாக பாதிக்கப்படுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களின் வாழ்வில் ஓர் அங்கமான சங்கக்கடைகள்



பி. துலக்ஷா
ஊடகக்கற்கைகள் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



தமிழர் தாயகத்திலும், இதர பகுதிகளிலும் சங்கக்கடைகள் என்பவை தவிர்க்கப்பட முடியாத ஒரு பகுதியாகவே இருந்து வந்திருக்கின்றன. முன்னைய காலப்பகுதியில் சங்கங்களின் ஊடாகவே பொருள்களைப் பெற்று ஏனைய தனியார் நிறுவனங்கள் தமது விற்பனை நடவடிக்கையை மேற்கொண்டன. இடப்பெயர்வுக் காலம், போர்க்காலப் பகுதிகளில் அரசாங்கம் பொருள்களினை சங்கக்கடைகளின் ஊடாகவே வழங்கிவந்தன. அரசாங்கம் மட்டுமன்றி அரச சார்பற்ற நிறுவனங்களும் கூட அத்தியாவசியப் பொருள்கள் உள்ளிட்ட அனைத்து விதமான பொருள்களையும் விநியோகிப்பதற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களையே பிரதான முகவர் நிலையங்களாக பயன்படுத்தியிருந்தன. போர்ச்சூழலில் இவை சமூகத்தின் உயிர் என்ற அளவுக்குச் செயற்பட்டன. சங்கக்கடைகளின் ஊடாக விற்கப்படும் பொருள்கள் முறையான விதத்தில் கட்டுப்பாடான விலையில் விநியோகிக்கப்படும் என்பதே சிறப்பானதொரு அம்சமாகும்.

### தனித்துவமாயிருந்தன

கூட்டுறவுச் சங்கங்களுக்கு என்று தனியானதொரு மவுசு இருந்தது. கூட்டுறவுச் சங்க அமைப்பினைப் பொறுத்தவரையில் குழு என்பது முக்கியமான ஒன்றாகக் காணப்படுகின்றது. சங்கக்கடை முகாமையாளரின் பதவிக்காலத்தில் இடமாற்றம் என்பது நிர்வாகக் குழுவின் மூலமாக நடைபெறும். ஏழு அல்லது எட்டுப் பேர் அடங்கியதாக இந்தக் குழு காணப்படும். இவர்களின் இடமாற்றம் என்பது இரண்டு வருடத்துக்கு ஒரு முறை என்ற ரீதியில் அமையும். பொதுவாக இவர்களின் ஓய்வுக்கால வயதெல்லை அறுபதாக காணப்படுகின்றது. முன்னர் மக்கள் மத்தியில் சங்கம் தான் பிரதான அமைப்பு. ஏன் என்றால் ஏனைய கடைகளினை விடவும் நியாயமான முறையில் பொருள்களினை வாங்க முடியும் என்பதனாலேயாகும். குறிப்பாக தட்டுப்பாடான இடர் காலப்பகுதிகளில் பொருள்களினை சங்கங்கள் வழங்கும் முறையானது பங்கீட்டு அட்டையின் மூலமாகவே நடைபெற்றது. பாண், மா, சீனி, அரிசி, பால்மா, பருப்பு, மீனின் போன்றன இவ்வாறான முறையில் ஒரு குடும்பத்துக்கு இவ்வளவு தான் என்று வரையறுக்கப்பட்ட முறையில் வழங்கப்பட்டன.

### தொழில்வாய்ப்புக்களையும் சங்கங்கள் வழங்கின

சில சங்கங்கள் தம்முடன் இணைந்த வகையில் நெசவுத்தொழிற்சாலை, சாப்பாட்டுக்கடை, தேநீர்க்கடை, மாடுவளர்ப்பு, பாற்பண்ணை, மில், உரத்தொழிற்சாலை போன்ற பல பிரிவுகளினை உள்ளடக்கியிருந்தன. சங்கங்கள் தோட்டத் தொழிலாளர்களிடமிருந்து உற்பத்திகளைப் பெற்று அந்த உற்பத்திக்கு ஈடான பணத்தைக் கொடுத்து வியாபார நடவடிக்கைகளை மேற்கொண்ட தன்மையும் உண்டு.

ஆனால், இப்பொழுது இவ்வாறானதொரு நிலை காணப்படுவதில்லை. இவை நடைமுறையில் இல்லாமல் செல்கின்றது என்பதே கசப்பான உண்மை.

### நலிவும் காரணமும்

மக்களின் வாழ்வில் பிரதானமான ஒரு அங்கமாக காணப்பட்ட சங்கம் பிற்காலப் பகுதியில் நலிவடைந்த நிலையிலேயே செல்கின்றது. குறிப்பாக தெல்லிப்பழைப் பிரதேசத்தில் 1990ஆம் ஆண்டு காலப்பகுதியளவில் சங்கமானது 42 கிளைகளைக் கொண்டு இயங்கி வந்தது. ஆனால் தற்போது வெறுமனே 15 கிளைகள் மாத்திரமே இருக்கின்றன. முன்னர் சங்கக்கடைகளில் பில் போடுவதற்கு ஒருவர் பொருள்களினை நிறுத்து வழங்குவதற்கு ஒருவர் என இரண்டு, மூன்று பேர் இருந்தார்கள். ஆனால், இப்பொழுது தனியே ஒரு நபரே அதனை மேற்கொண்டு வரும் நிலை காணப்படுகின்றது. இதற்கு பிரதானமான காரணம் சங்கக்கடைகளினை நோக்கி மக்களின் நாட்டம் குறைகின்றமையே.

தற்போதைய சூழலில் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் குறைந்த செயற்றிறன் கொண்டிருப்பதற்கும் அவற்றின் கிளைகள் மூடப்பட்டதற்கும் பல காரணங்கள் இருந்தாலும் நடைமுறை மூலதனம் இன்மை தான் பிரதானமான காரணமாகும். சங்கம் ஒன்று நஷ்டமடைந்தால் அந்த இழப்புத் தொகையை சங்க அமைப்புத்தான் வழங்க வேண்டும்.

சங்கத்தினுடைய சொத்துக்களை விற்றே அவை நிவர்த்தியாக்கப்படும் தன்மையும் உண்டு. இருப்பினும் இவ்வாறான முறையினைப் பின்பற்றுவதென்பது கடினமான விடயமாகும்.

தற்காலப்பகுதியை பொறுத்தவரையில் மக்கள் ஏனைய கடைகளை நாடிச் சென்றாலும் தட்டுப்பாடு என்ற ஒரு பெயரினைக் கேட்டவுடன் சங்கக்கடைகளினை நாடி வரும் தன்மையினை இப்பொழுதும் அவதானிக்க முடிகின்றது. இவ்வாறாக மக்களின் வாழ்வியலில் பிரிக்க முடியாத அங்கமாக எப்பொழுதும் சங்கக்கடைகள் காணப்படுகின்றன என்பது தனிச்சிறப்பான விடயமாகும். ■

---

# பொருளியல் காவுகள்

மருத்துவர் சி.யமுனாநந்தா



இலங்கையின் பொருளாதார நெருக்கீடு முறையாக எதிர்கொள்ளப்படாவிடின் அடுத்துவரும் 75 வருடங்களில் இனப்பரம்பலில் மாற்றங்கள் ஏற்படும். தற்போதைய பொருளாதார நெருக்கடியில் இலங்கையில் இருந்து பெருமளவில் மக்கள் வெளிநாடுகளுக்கு புலம்பெயர்கின்றனர். இதில் துறைசார் நிபுணர்கள் முதல் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் மற்றும் சாதாரண தொழிலாளிகள் வரை அதிக வருமானத்துக்காக நாட்டைவிட்டு வெளியேறும் சூழல் ஏற்பட்டுள்ளது. இலங்கையில் தற்பொழுது புலம்பெயரும் மக்களை இனரீதியாகப் பார்க்கையில் வழமையாக தமிழர்கள் புலம்பெயரும் நிலைமாறி பெருமளவான சிங்கள மக்களும் புலம்பெயரும் நிலைமை தோன்றியுள்ளது. இலங்கை சுதந்திரமடைந்து 75 வருடங்களை அண்மிக்கும் இந்த வேளையில் கடந்தகாலங்களில் கிழக்கு மாகாணம், வடமத்திய மாகாணம் என்பவற்றில் விவசாயக் குடியேற்றங்களில் குடியமர்த்தப்பட்ட மக்களும் தமது வாழ்வாதாரத்துக்காக மத்திய கிழக்கு நாடுகளுக்குச் செல்லும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இலங்கையில் உள்ள தமிழர்களில் பெரும்பாலானவர்கள் ஏற்கனவே புலம்பெயர்ந்த நிலையில் அவர்களுக்கு என உறுதியான சமூகத் தொடர்புகள் உண்டு. மேலும் இலங்கைத் தமிழர்களுக்கு தமிழகத்துடனான கலாசார உறவும் பலமாக உள்ளது. இதனால் தமிழர்களின் மொழி, கலாசாரம் புலம்பெயர் நிலையிலும் உறுதியாக உள்ளது. மாறாகச் சிங்கள மக்கள் நாட்டைவிட்டு புலம்பெயரும் நிலையில் இலங்கையில் சிங்கள மக்களது சமூக பொருண்மிய மேன்மை பாதிக்கப்படும். புலம்பெயரும் சிங்கள மக்களும் இன்னும் 10 வருடங்களுக்கு மேல் வெளிநாடுகளில் கடுமையாக உழைக்க வேண்டிய சூழல் ஏற்படும். இந்த நிலையில் அவர்களது இரண்டாம் சந்ததியினர் மீளவும் இலங்கைக்கு வர விழையமாட்டார்கள்.

இலங்கையிலுள்ள முஸ்லிம் மக்கள் இலங்கையிலே சிறப்பாக எத்தகைய தொழிலையும் செய்து தமது வாழ்வை சிறப்பாக மேற்கொள்கின்றனர்.

சாதாரணமாகவே குடிப்பரம்பல் வீத அதிகரிப்பைக் கொண்ட மக்கள் முஸ்லிம் மக்களேயாவர். இந்த நிலையில் இன்னும் 50 வருடங்களில் முஸ்லிம்களே சனத்தொகை அதிகமுள்ள சமூகமாக மாறுவார்கள்.

தமிழ்மொழியும் தமிழ்ப் பாரம்பரியமும் வட இலங்கையும் தமிழகமும் தொடர்பில் இருப்பதனால் மாற்றமடையாது பேணப்படும். ஆனால் சிங்கள மொழியும் பௌத்த பாரம்பரியமும் அடுத்த 75 வருடங்களுக்குப் பின்னர் தென்னிலங்கையில் இல்லாது போகும் சூழலையே தற்போதைய பொருளாதார தாழ்நிலை இனம்சார் புலம்பெயர்வு ஏற்படுத்தி உள்ளது. இலங்கையின் 75ஆவது சுதந்திர தினத்தை யாழ்ப்பாணத்தில் தேசிய விழாவாகக் கொண்டாடும் நிகழ்வானது எதிர்காலத்தில் மங்கும் தென்னிலங்கை அரசியல் தலைமைத்துவத்தைக் கட்டியம்கூறும் நிகழ்வாகக் கருதலாம். அடுத்த 75 வருடத்தில் வட இலங்கை சேது இராஜ்ஜியத்தின் பகுதியாக பொருளாதாரத்தில் மேன்மை உறும்.

எனவே தற்போதைய பொருளாதார தாழ்வு நிலையைத் தீர்ப்பதற்கு இலங்கை அரசு தவறிவிட்டால் சிங்கள மக்களின் எதிர்காலம் இலங்கையில் இல்லாது போகும் சிறந்த பொருளியல் நுட்பமாக சமவுடமை பொருளாதாரத்தை தற்போது அறிமுகப்படுத்தல் அவசியம். திரவப்பண ஓட்டத்தினை வங்கிகளில் மட்டுப்படுத்தப்படல் வேண்டும். அனைவரும் கட்டாய கடமைக்குச் செல்லல் அவசியம். வெளிநாடுகளுக்குச் செல்வதைக் கட்டுப்படுத்தல் அவசியம். வேதனம் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் வழங்கப்படல் அவசியம். உணவுப் பொருள்கள் பங்கீட்டு அடிப்படையில் வழங்கப்படல் வேண்டும். விவசாயம், மீன்பிடி, சிறுகைத்தொழில்களுக்கு ஊக்குவிப்பு வழங்கப்படல் வேண்டும்.

இவ்வாறு திட்டமிட்டாலேயே ஒரு வருடத்தில் பொருளாதார தாழ்நிலையிலிருந்து மீளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சங்கரி சிவகணேசன்

# விழுந்த விதை அழியுமுன்

ஒரு குழந்தையாக
இந்தப் பிரபஞ்சத்துக்குள்
நுழையும் போது
நமக்காய் காலம்
பரிசளித்த மலர்க்கொத்தில்
மகிழ்ச்சி மட்டுமே
மணம் வீசிக்கொண்டிருந்தது..

காலம் நமக்கு சிறகு தந்து
பட்டாம்பூச்சிகளாக
பறக்க விட்டிருந்தது..

குழந்தை ஒரு
பிரஜையாக உருமாறும் போது
தேவைகள் தேடல்கள் என
விரிகையில்
பிரபஞ்சம் நமக்குள்
நுழைந்துவிடுகிறது..
பத்திரமாய் சேர்த்து வைத்த
பட்டாம்பூச்சி நினைவுகளை
காலக்கோப்பைக்குள்
மெதுவாய் மெதுமெதுவாய்
நிரப்பிக் கொள்ள
தளும்பி ஓரங்களிலிருந்து
விழுந்துவிடுகிறது
குழந்தை மனசு
காலத்தின் பாதையில்..

காலத்தின் காலடியில் கிடந்தபடி
வாழ்க்கையின் யாசகியாக
வார்த்தைகளை வரிக்குள்
சிறைப்பிடித்து
ஒரு கவிதையை
எழுதி வைத்துவிடுகிறேன்..

காலம் தன் கோரமுகத்தைதான்
காட்டி பல்லிளிக்கிறது..
எப்படியாவது அதன் தோள்மீது ஏறி
காலத்தின் அகோர முகத்தைப்
பார்த்திட வேண்டும்
இந்தப் பிரபஞ்சத்தில்
விழுந்த விதை
அழிந்திடும் முன்பு..

## நீத்தார் நயப்புரை

■ பா.நந்தகுமார்



# லோகேஸ்வரசர்மா சிவயோக சுவாமிகள் மக்கள் நலன்காத்த மதிப்புறு அர்ச்சகர்!

நவராத்திரி விழாவின் மானம்பூ உற்சவத்தின் வாழை வெட்டும் நிகழ்வுக்கு பிரசித்தி பெற்றவரான கொழும்புத்துறையூர் பிரம்மஸ்ரீ சோ.லோகேஸ்வரசர்மா தவத்திரு சிவயோக சுவாமிகள் டிசெம்பர் மாதம் 26ஆம் திகதி தனது 83ஆவது வயதில் காலமானார்.

சிறந்த அர்ச்சகராக விளங்கிய இவர் பிரதேச வாழ் மக்களின் நன் மதிப்பை பெற்றவர். தவத்திரு சிவயோகசுவாமிகள் மீதும் அவர் அதிக பற்றுங் கொண்டவர். சிவயோக சுவாமிகள் குருபூசை தினத்தை கூட மிக வும் சிறப்பாக நடத்தி முடிக்கும் பெருவிருப்பம் கொண்டவர்.

மானம்பூ உற்சவத்தின் வாழை வெட்டும் இவரது நிகழ்வை பார்ப்பதற்கு யாழ்ப்பாணத்தில் பல்வேறு பகுதிகளில் இருந்தும் நூற்றுக்கணக்கான மக்கள் முன்னர் கொழும்புத்துறைக்கு படையெடுத்து செல்வார்கள். 'ஒரு பொல்லாப்பும் இல்லை: எப்பவோ முடிந்து விட்டது' என்ற சிவயோக சுவாமிகளின் திருவாக்குக்கு அமைய சர்மா இறைவனடி சேர்ந்த செய்தி அறிந்து இப்பிரதேசமே கண்ணீரில் நனைந்தது. நாம் இருக்கின்ற வேலை மக்களுக்கு ஆற்றுகின்ற சேவைகள் யாவுமே இறைவனை சென்றடையும் என்பார்கள்.

அதே போன்று தான் லோகேஸ்வரா சர்மாவும் வாழ்நாளில் ஏழை மற்றும் வறிய மக்களுக்கு உணவளித்தார். ஒரு சிறந்த அர்ச்சகரை, மக்கள் சேவையாளனை, இரக்க குணமுடையவரை இந்த மண் இழந்து தவிக்கிறது.

## நூல் வெளியீடு

# "இடர் சுமந்த மேனியர்"

யாழ் பல்கலைக்கழக தமிழ்த் துறையின் தமிழியற்கழகத்தின் இரண்டாம் வருட மாணவி முல்லை முகுந்தினியின் "இடர் சுமந்த மேனியர்" என்னும் நூல் வெளியீட்டு நிகழ்வு யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெற்றது.

யாழ் பல்கலைக்கழக தமிழியற்துறை தலைவி ஜெயா தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வில்,

யுத்த கால நினைவுகளையும் தனது ஒன்பது வயதில் கண்டுகளித்த வாழ்க்கையின் அனுபவங்களையும் உணர்வுபூர்வமாக எடுத்தியம்புமுகமாக முல்லை முகுந்தினியின் நூல்வடிவமைக்கப்பட்டது.

இந்த நூல் வெளியீட்டு நிகழ்வில் துணைவேந்தர் பேராசிரியர் சிறிசற்குணராஜா மற்றும் கலைப்பீட பீடாதிபதியும் வாழ்த்துரையை வழங்கினர்.

தொடர்சியாக தமிழ்த்துறை தலைவர் பேராசிரியர் ம.இரகுநாதனால் வெளியீட்டுரை இடம்பெற்றது.



யாழ் பல்கலைக்கழக துணைவேந்தரால் இடர்சுமந்த மேனியாய் நூல் வெளியீடு செய்து வைக்கப்பட்ட நிலையில் நூலின் முதற் பிரதியை துணுக்காய் பாண்டியன் குளம் தொழில்நுட்ப கலை கலாசார மற்றும் பெண்கள் மேம்பாட்டு மைய தலைவர் கார்த்திகேசு யோகநாதன் பெற்றுக்கொண்டார்.

இந்நிகழ்வில் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (125)

## புதன்பொய்கைக்கு எழுதுங்கள்

புதன்பொய்கையில் உங்கள் ஆக்கங்கள் (இலக்கியம், கலை மற்றும் கலாசாரம்), இலக்கியப் படைப்புக்கள் விமர்சனங்கள், கவிதைகளை பிரசுரிக்க ஒரு வாய்ப்பு. உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் கலை, கலாசார நிகழ்வுகள், நூல்வெளியீடுகள், ஆற்றுகைகள் தொடர்பான பதிவுகளையும் புகைப்படங்களுடன் அனுப்புங்கள்.

**அனுப்ப வேண்டிய முகவரி :**

புதன்பொய்கை, உதயன்
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

மின்னஞ்சல் முகவரி :
**puthanpoigai@gmail.com**

# சேவை நலன் பாராட்டும் "உதயம் நூல்" வெளியீடும்





பளை மத்திய கல்லூரியில் அதிபராகக் கடமையாற்றி ஓய்வுபெற்ற அதிபர் கணபதிபிள்ளை உதயகுமாரனின் சேவை நலன் பாராட்டு விழாவும் "உதயம் நூல்" வெளியீடும் உப க.ருகுணன் தலைமையில் கல்லூரி வளாகத்தில் கடந்த 18ஆம் திகதி புதன்கிழமை நடைபெற்றது.

குறித்த நிகழ்வில் பாடசாலை ஆசிரியர் நலன்புரிச்சங்கம், மற்றும் பெற்றோர்கள், மாகாண கல்வியமைச்சின் செயலாளர், மாகாணக்கல்விப்பணிப்பாளர், பிரதிக்கல்விப்பணிப்பாளர்கள், வலயக்கல்விப்பணிப்பாளர்கள், கோட்டக்கல்விப் பணிப்பாளர், அதிபர்கள் என கல்விப்புலம் சார்ந்த பலரும் கலந்து சிறப்பித்து வாழ்த்துரை வழங்கினார்கள். ஓய்வு பெற்ற அதிபர் உயர்திரு. கணபதிப்பிள்ளை உதயகுமாரன் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெறும் மாணவர்களைக் கௌரவிப்பதற்காக பாடசாலைக்கான கல்வி நிதியம் ஒன்றினையும் ஆரம்பித்து வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்
25 . 02 . 1950

மறைவு
28 . 12 . 2022

## நடராசா சிவரட்ணம்

**(ஓய்வுநிலை உதவிப் பொதுமுகாமையாளர், இலங்கை வங்கி, வடமாகாணம், பொது முகாமையாளர் V2 Travels & Tours PVT LTD)**

ஆதி கோவிலடி வல்வெட்டித்துறையை பிறப்பிடமாகவும், முருகையன் கோவிலடி வல்வெட்டித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா சிவரட்ணம் அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் 27.01.2023 வெள்ளிக்கிழமை அன்று மதியம் 12 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அந் நிகழ்வில் பங்குகொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் பங்குகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**(இதனை தனிப்பட்ட அழைப்பாக மனமுவந்து ஏற்றுக்கொள்ளவும்)**


மேலும் அன்னாரின் மரணச்செய்தியறிந்து நேரிலும், தொலைபேசி ஊடாகவும் ஆறுதல் தெரிவித்த அனைவருக்கும், பதாகைகள், மலர்வளையங்கள், கண்ணீர் அஞ்சலி பிரசுரங்கள் மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் எமது மனமுவந்த நன்றிகளை தெரிவிக்கின்றோம்.

**முருகையன் கோவிலடி,**
**வல்வெட்டித்துறை.**

**குடும்பத்தினர்.**
**077 236 7407**

(CS23037) 1-6

## மரண அறிவித்தல்



## சின்னத்தம்பி மகராசா

மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும் சுழிபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி மகராசா நேற்று (24.01.2023) செவ்வாய்க்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி குஞ்சரம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற தம்பிராசா செல்லம் தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், சுதா, ஐங்கரன் (தனியார் பாதுகாப்பு உத்தியோகத்தர், இலங்கை வங்கி, மல்லாகம்), சர்மிலன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், நிமலன், லாவன்ஜா ஆகியோரின் அன்பு மாமனாரும், நிருத்திகா, டினுஸ் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற நடராசா, பரமேஸ்வரி, நாகேஸ்வரி மற்றும் சிவராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.01.2023) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 1.00 மணியளவில் திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சுழிபுரம் கிழக்கு,**
**செருக்கப்புலம்.**

**தகவல்:**
**மகன் ஐங்கரன்.**

(CS23122) 1/6

## யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றிய பொங்கல் விழா கோலாகலம்

யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் பொங்கல் விழா பல்கலைக்கழக பிரதான வளாகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை சிறப்பாக முன்னெடுக்கப்பட்டது.

ஆரம்ப நிகழ்வாக கலைப்பீடத்தில் கல்விகற்கும் மாணவர்களிடையேயும் கலாசார பாரம்பரியங்களை வளர்க்கும் முகமாக பல்கலை வளாகத்தில் ஐந்து இடங்கள் ஒதுக்கப்பட்டு பொங்கல் போட்டி இடம்பெற்றது. பொங்கல் போட்டியில் முதலாவது இடத்தை கலைப்பீடத்தின் 41 ஆவது அணியினர் பெற்றுக் கொண்டனர். தொடர்ச்சியாக கலாசார விளையாட்டுக் கள் இடம்பெற்று இறுதியில் கைலாசபதி கலையரங்கில் கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன. யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் கலை கலாசார பொறுப்பாளர் நித்தியானந்தன் பிர தீபன் தலைமையில் இடம்பெற்ற விழாவில், பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சிறிசற்குணராஜா, கலைப்பீடாதிபதி பேராசிரியர் ரகுராம், இந்து கற்கைகள் பீடாதிபதி பத்மநாபன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

(ம-14,125)

### வீடு வாடகைக்குத் தேவை

யாழ் நகரை அண்டிய பகுதியில் 3 பேர் கொண்ட சிறிய குடும்பமொன்றிற்கு வீடு வாடகைக்குத் தேவை.

**077-6354 224**

### சுத்திகரிப்பு பணியாளர் தேவை



**யாழ்நகரில் இயங்கும் பிரபல தனியார் கல்வி நிறுவனத்திற்கு சுத்திகரிப்பு பணியாளர்** தேவை.
கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்
மேலதிக தொடர்புகளுக்கு:
**077 120 9973**

### சுத்திகரிப்பு பணியாளர் தேவை

யாழில் இயங்கிவரும் எமது நிறுவனத்திற்கு சுத்திகரிப்பாளர் தேவை. பகுதிநேரமாகவும் விண்ணப்பிக்கலாம். ஆர்வமுள்ளவர்கள் கீழ்குறிப்பிட்ட திகதிகளில் நேரில் சமூகம் தரவும்.



**திகதி :** 26.01.2023 (வியாழன்)
27.01.2023 (வெள்ளி)
28.01.2023 (சனி)

**நேரம் :** காலை 9.00 மணிமுதல்
மாலை 6.00 மணிவரை.

தேவை ஏற்படின் தங்குமிட வசதி செய்துதரப்படும்.

**உதயன் பணிமனை**
**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

### சேவைநலன் பாராட்டு

**திரு. சி. உமாகரன்**



நியமனம்: 01.03.1985
ஓய்வு: 31.12.2022

**திரு. இ. குகதாஸ்**



நியமனம்: 01.10.2001
ஓய்வு: 12.01.2023

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உடற்கல்வி அலகில் உத்தியோகத்தர்களாக சேவையாற்றி ஓய்வுபெறும் திரு. சி. உமாகரன் மற்றும் திரு. இ. குகதாஸ் ஆகியோர் உடற்கல்வி அலகில் ஆற்றிய சேவையை பாராட்டுவதோடு, இவர்களின் ஓய்வுகாலத்தில் சகல நலன்களையும் பெற்று சௌபாக்கியமாக வாழ வாழ்த்துகின்றோம்.

**உடற்கல்விச் சமூகம்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

### கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரி ஆசிரியையும் சேவையாளர் சங்க உறுப்பினருமான திருமதி சுவைதா ஸ்ரீகணேசன் அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி பாக்கியம் துரைரட்ணம்**

அவர்கள் 24.01.2023 செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார். அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**சேவையாளர் சங்கம்,**
**யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி.**

### பெயர் மாற்றம்

வள்ளிபுனம் இடைக்காடு, புதுக்குடியிருப்பு முல்லைத்தீவில் வசிக்கும் **மாணிக்கம் புவனேஸ்** ஆகிய நான் இன்று முதல் எனது பெயரை **மாணிக்கம் புஸ்பம்** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **மாணிக்கம் புஸ்பம்** என்றே கையொப்பமிட்டு பயன்படுத்துவேன் என இலங்கை சோசலிச குடியரசிற்கு உறுதிப்படுத்துகின்றேன்.

**மாணிக்கம் புஸ்பம்.**

### சேவை

துன்னாலை மேற்கு, கரவெட்டியில் வசிக்கும் **பாலன் தவயோகம் சமாதான நீதவான்** ஆகிய நான் அறியத்தருவது யாதெனில் **27.01.2023 தொடக்கம்** எனது சேவை தொடரும் என்பதனை அறியத்தருகின்றேன்.

**பா.தவயோகம்** -J.P

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார நெருக்கடியால் மனநோயாளர்கள் அதிகரிப்பு

## மருத்துவர்கள் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜன. 25

பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தால் நாட்டில் சுமார் 30 வீதமானோர் மனநோய் தாக்கத்துக்கு உள்ளாகியுள்ளனர் என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பில் மருத்துவர்கள் மேலும் தெரிவித்ததாவது:
இலங்கை எதிர்கொண்டுள்ள கடுமையான பொருளாதார நெருக்கடியால் உருவான பொருள்களின் விலையுயர்வு, வரித்திருத்தங்கள் போன்றவற்றை சமாளிக்க இயலாது நாட்டு மக்கள் திண்டாடி வருகின்றனர்.
இதனால் மனநோயாளிகளாக மக்கள் மருத்துவமனைகளில் சேர்க்கப்படுவது அதிகரித்துள்ளது. சுமார் 30 வீதம் வரை இந்த அதிகரிப்பு நிகழ்ந்துள்ளது.
எதிர்காலம் குறித்த விரக்தி மற்றும் அழுத்தங்களால் இளையோரும் அதிகளவில் பாதிப்புக்குள்ளாகி வருவதுடன் அவர்கள் தமது மன அழுத்தங்களை சமூகத்தின் மீது வெளிப்படுத்துகின்றனர்.
அத்துடன் பொருளாதாரச் சிக்கல்களால் தமது கற்றல் நடவடிக்கைகளை உரிய காலத்தில் நிறைவேற்ற முடியாது சிறுவர்களும் மனஅழுத்தங்களுக்கு உள்ளாகி வருகின்றனர் - என்றனர். (ம)

# உயர்தரப் பரீட்சையில் சாவுத் தண்டனை கைதி

கொழும்பு, ஜன. 25

மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ள சிறைக்கைதி ஒருவர் கடந்த திங்கட்கிழமை ஆரம்பமான உயர்தரப் பரீட்சைக்கு தோற்றுகிறார் என சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.
இவருடன் மேலும் நான்கு கைதிகள் வெலிக்கடை சிறைச்சாலையிலிருந்து க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு தோற்றுகின்றனர். கைதிகள் வெலிக்கடையிலுள்ள மகசின் சிறைச்சாலை பரீட்சை நிலையத்தில் பரீட்சைக்கு தோற்றுவர். இதேவேளை யாழ்ப்பாண சிறைச்சாலையில் உள்ள கைதி ஒருவரும் உயர்தரப் பரீட்சையில் தோற்றவுள்ளார் என திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (ச-இ)

# கிராமப்புறப் பாடசாலைகள் மீள வளர்ச்சியுற வேண்டும்

## நளாயினி இன்பராஜ் தெரிவிப்பு

சாவகச்சேரி, ஜன. 25

அன்றைய காலத்தில் கிராமப்புறப் பாடசாலைகளே கல்வி, விளையாட்டு எனப் பலவற்றிலும் சிறந்து விளங்கின. அந்த நிலைமை மீண்டும் உருவாக வேண்டும் என்று வடமாகாண கல்வி பண்பாட்டு விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் நளாயினி இன்பராஜ் தெரிவித்தார்.
கச்சாய் மகா வித்தியாலயத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
அன்று எமது காலத்தில் பாடசாலைக்குச் செல்லும் மாணவ, மாணவிகளுக்கு ஆசிரியர்கள் அனைவரும் ஒரு தந்தை மாதிரி அதற்குரிய பக்குவத்தோடு இருந்தனர். எந்தவொரு பிரச்சினைகளும் இன்றி தந்தை போன்று செயற்பட்டனர்.
இன்று எத்தனையோ பிரபல்யமான பாடசாலைகளில் தான் தங்களது பிள்ளைகள் கல்வி கற்கவேண்டும் என்று பெற்றோர் துடிக்கின்றனர். ஆனால் அன்று அப்படியல்ல. எங்களுடைய கிராமப்புறப் பாடசாலைகள் தான் எமக்கு தெய்வம் மாதிரி. இன்றைய தொழில்நுட்ப வசதிகள், பயிற்சிநெறிகள் எதுவுமற்று அன்று கல்வி கற்பித்தனர்
அன்று அநேகமான பாடங்கள் வேப்பமரத்துக்குக் கீழே நடந்தது. அப்படியாக மிக வளங்கள் குறைந்த இயற்கை தான் எங்களுக்கு அங்கே இருந்தது. அதற்கான ஒரு கொட்டில் வகுப்புகள் இருந்தன. ஆனால் தற்போதைய மாணவர்கள் தொழில்நுட்ப வசதிகளைக் கொண்ட திறன் வகுப்பறையில் கல்வி கற்கின்றனர். கிராமப்புற பாடசாலைகள் அனைத்தும் தற்போதும் சிறந்ததாகவே காணப்படுகின்றது. தற்போது கச்சாய் மகாவித்தியாலயத்தில் உயர்தரக் கல்வி உருவாக்கப்பட்டுள்ளது. எனவே இங்கு கற்கும் மாணவர்கள் அனைவரும் கலைத்துறையிலே இணைந்து இந்த பாடசாலையிலே கல்வியைத் தொடர வேண்டும் - என்றார். (எ-14,159)

# குடிதண்ணீருக்குத் தவிக்கும் கேப்பாபிலவு கிராம மக்கள்!

## நடவடிக்கை எடுக்கக் கோரிக்கை

முல்லைத்தீவு, ஜன. 25

கேப்பாப்பிலவு மாதிரிக் கிராமத்தில் காணப்படும் குடிதண்ணீர் நெருக்கடிக்கு விரைவில் தீர்வு வழங்கவேண்டும் என்று வட மாகாண முன்னாள் விவசாய அமைச்சர் க.சிவனேசனிடம் அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
வடக்கு மாகாண முன்னாள் விவசாய அமைச்சர் க.சிவனேசனுக்கும் கேப்பாப்பிலவு கிராம மக்களுக்கும் இடையில் சந்திப்பொன்று அண்மையில் இடம்பெற்றது.
2010 ஆம் ஆண்டுக்குப் பின்னர் கேப்பாப்பிலவு மாதிரிக் கிராமம் உருவாக்கப்பட்டதில் இருந்து தற்போதுவரை குடிதண்ணீருக்கான நெருக்கடி காணப்படுகின்றது. இதுதொடர்பில் அதிகாரிகளிடம் தெரியப்படுத்தப்பட்டும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை. எனவே இதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கவேண்டும்.
அத்துடன் கிராமத்தில் ஆழ்துளைக் கிணறு ஒன்று அமைக்கப்பட வேண்டும். மேலும் மாதிரிக் கிராமத்தில் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகம் உள்ள போதிலும் மைதானம் இல்லாததன் காரணமாக போட்டிகளுக்கு தயார்ப்படுத்துவதில் விளையாட்டு வீரர்கள் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர். எனவே விளையாட்டு மைதானத்துக்கான காணி ஒதுக்கப்பட வேண்டும் என்று கிராம மக்கள் தெரிவித்தனர்.
மக்கள் சந்திப்பில் வடமாகாண முன்னாள் விவசாய அமைச்சர் க.சிவனேசன், கரைதுறைப்பற்று பிரதேசசபையின் முன்னாள் தவிசாளர் க.தவராசா மற்றும் யுட்பிரசாத், கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர், கிராம மக்கள் எனப்பலர் கலந்து கொண்டனர். (எ-14,13)

# மாங்குளம் மகா வித்திக்கு தற்காலிக அதிபர் நியமிப்பு

முல்லைத்தீவு, ஜன. 25

முல்லைத்தீவு மாங்குளம் மகா வித்தியாலயத்துக்கு கடந்த வெள்ளிக்கிழமை புதிய அதிபர் நியமிக்கப்பட்டுள்ளார். வடக்கு மாகாண கல்வி அமைச்சால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.
முல்லைத்தீவு துணுக்காய் கல்வி வலயத்தில் தேசிய பாடசாலையாக விளங்கும் இந்தப் பாடசாலையில் இருவருடங்களுக்கு மேலாக அதிபர் நியமிக்கப்படவில்லை.
இதனால் கடந்த வாரம் பெற்றோரால் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.
இந்த நிலையில் தகுதி 1 தரமுடைய அதிபர் நியமிக்கப்படும்வரை தற்காலிக அதிபர் ஒருவரை வடக்கு மாகாண கல்வி அமைச்சு நியமித்துள்ளது. தற்காலிக அதிபராக நியமிக்கப்பட்டவர் யாழ். அச்சுவேலி மகளிர் கல்லூரி, கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம் ஆகியவற்றில் பிரதி அதிபராக கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-13,19)

# கோடாவுடன் ஒருவர் கைது

பண்டத்தரிப்பு பகுதியில் கசிப்புக் காய்ச்சிய குற்றச்சாட்டில் சந்தேகநபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.
காங்கேசன்துறை மாவட்ட விசேட குற்றத்தடுப்பு பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய இந்தக் கைது இடம்பெற்றது. சந்தேகநபரிடமிருந்து கசிப்பு காய்ச்சுவதற்காக வைத்திருந்த 30 லீற்றர் கோடா மீட்கப்பட்டது.
சந்தேகநபர் இளவாலை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டதையடுத்து அவர் சட்ட நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். (ச-23)

# விவசாயிகளுக்கு இலவசமாக உரம்!

கொழும்பு, ஜன. 25

நெற்பயிர்ச் செய்கைக்கு அத்தியாவசியமாக தேவைப்படுகின்ற உரமான ரீ.எஸ்.பி. உரத்தை எதிர்வரும் சிறுபோக பயிர்செய்கைக்கு அனைத்து விவசாயிகளுக்கும் இலவசமாக பகிர்ந்தளிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று கமத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
பெரும்போகத்தின்போது நெற்செய்கையாளர்களுக்கு உரம் விநியோகிக்கப்படவிருந்த போதிலும், ரஷ்யா மற்றும் உக்ரைன் இடையேயான யுத்தத்தால், உரம் கிடைப்பதில் சிக்கலிருந்தது.
இந்த நிலையில் 36 ஆயிரம் மெட்ரிக் தொன் உரம் அடங்கிய கப்பலொன்று அடுத்த மாதம் நாட்டை வந்தடையவுள்ளது. இதன்மூலம் சிறு போகத்துக்குத் தேவையான உரத்தை விவசாயிகளுக்கு இலவசமாக பகிர்ந்தளிக்க [illegible] எடுக்கப்பட்டுள்ளது - என்றார். (ம)

# இந்திராபுரத்தில் பஸ் தரிப்பிடம்

கிளிநொச்சி, ஜன. 25

பளை இந்திராபுரம் ஏ-9 வீதியில் பஸ் தரிப்பிடம் அமைப்பதற்கான அடிக்கல் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடப்பட்டது.
இந்திராபுரத்தைச் சேர்ந்த வ.கந்தையா மற்றும் அவரது மனைவி பாக்கியம் ஆகியோரின் நினைவாக அவர்களின் குடும்பத்தினரால் அமைக்கப்படவுள்ளது.
இந்திராபுரம் கிராமத்தில் மக்கள் மீளக்குடியமர்ந்து 5 வருடங்களாகிய நிலையில் தற்போது பஸ் தரிப்பிடக் கட்டடம் அமைக்கப்படவுள்ளது.
1990 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அமைக்கப்பட்டிருந்த பேருந்து தரிப்பிடம் போர்க் காலத்தில் சேதமடைந்து ஏ-9 வீதி புனரமைப்பின்போது முழுமையாக அகற்றப்பட்டது. (எ-14,9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## மதியாபரணம் மணிவண்ணன் (மணி)

அன்னை மடியில் 25 - 05 -1964

அம்பாள் அடியில் 21.01.2023



நயினாதீவு 5 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் யாழ். கொக்குவில் குளங்கரை ஒழுங்கையை வதிவிட மாகவும் கொண்ட மதியாபரணம் மணிவண்ணன் (மணி), கடந்த (21.01.2023) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மதியாபரணம் மற்றும் பாலாம்பாள் தம்பதியரின் அன்பு மகனும், நெடுந்தீவு தம்பிராசா, காலஞ்சென்ற காமாட்சி தம்பதியரின் அன்பு மருமகனும், ரதிதேவியின் பாசமிகு கணவரும், மதிவதனன், மணிமேகலா, மணிரூபன், மதிவதனி, நவசங்கர் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், பிறேமகுமாரி, பிறேம்குமார், சுசிகலா, சிவகுமாரன் தேவதர்சினி மற்றும் சோ்திநாதன் - காந்திமதி ஆகியோரின் அன்பு மைத்துனரும், மயூரன், முபீசன் அகியோரின் சித்தப்பாவும், லாவண்யா, திரிஷா, வினிஷா, விதுசன், சரண்யா ஆகியோரின் பெரிய தந்தையும், அனோஜன், பவித்திரா, சஞ்சயன், பவித்திரன், லக்சனா, நிருசனா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், நீராவின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.01.2023) வியாழக்கிழமை காலை 9.30 மணி யளவில் அவரது இல்லத்தில் நடை பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பொற்பதி வீதி,
11/5, குளங்கரை ஒழுங்கை, கொக்குவில்.
077 995 8491


தகவல்:
குடும்பத்திரனர்

(cs48774) (2/6)

ஓம் விராட் விஸ்வ பிரம்மனே நமஹ

# மரண அறிவித்தல்

அன்னை மடியில் 19 . 05 . 1930



இறைவன் அடியில் 21 . 01 . 2023

## வைத்திலிங்கம் குமாரசாமி (ஆசாரி)

காளிகோவிலடி, களபூமி, காரைநகரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் குமாரசாமி (ஆசாரி) கடந்த (21.01.2023) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் மீனாட்சி தம்பதிகளின் மூத்த புதல்வனும், காலஞ்சென்ற இளையதம்பி வள்ளியம்மை தம்பதிகளின் பாசமிகு அன்பு மருமகனும், காலஞ்சென்ற நாகமுத்துவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சாம்பசிவம், புஸ்பராணி மற்றும் சரோஜினிதேவி ஆகியோரின் பாசமிகு தந்தையும், கனகமணி காலஞ்சென்ற பரமசாமி மற்றும் சிவ்சுப்ரமணியம் ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி, சிவக்கொழுந்து, சரஸ்வதி மற்றும் சுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற சோமசுந்தரம், சரவணமுத்து, புனிதவதி, சின்னத்துரை, பத்தினி, பார்வதி, நடராசா, நாகேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், திரேசாயினி, காலஞ்சென்றவர் களான பாலமுரளி, புஸ்பசாயினி, ரூபாசாயினி மற்றும் பத்மதீபன், பிரதீபன் சதீபா துஸ்யா, கிருஸ்யா, சர்மிளாவதி, பிரபாகரன், பாஸ்கரன் (பிரான்ஸ்), டினேஸ் ஆகியோரின் பேரனும், கஜானா, பவீனன், கம்சா, டேவிட், சந்தோஸ், நிந்துஜா, துசிதா, யஸ்வந், குயிலின்பன் ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.01.2023) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தில்லை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

காளிகோவிலடி, களபூமி,
காரைநகர்.

(CS 48773) 4/6

தகவல்:
குடும்பத்தினர்.

**074 383 7138, 077 850 3690**

# கண்ணீர் அஞ்சலி

மலர்வு 29.12.1949

உதிர்வு 23.01.2023



மைதிலி நகைமாடம் (Pvt) Ltd -
உரிமையாளர் திரு. ஆனந்தன்,
சந்தோஷ் ஜுவல்லறிஸ் உரிமையாளர்
திரு. கஜந்தன் ஆகியோரின்
பாசமிகு தாயார்

## திருமதி நடராசா தங்கமலர்

அவர்கள் காலமான செய்தி அறிந்து மிகுந்த வேதனை அடைவதோடு, அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் பிரிவுத் துயரில் பங்குகொள்கின்றோம். மேலும் அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கின்றோம்.

**ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி!!!**

| | | |
|---|---|---|
| **புதிய நதியா** நகைமாடம் 73, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். | **கந்தவேலன்** ரேடர்ஸ் 110, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். | **பாலவிநாயகர்** மோட்டார்ஸ் 46, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை
## மீள் ஏல விற்பனை அறிவித்தல்
## நெளுக்குளம் மீன்கடை, தோணிக்கல் மீன்சந்தை, சாளம்பைக்குளம் மீன்கடை என்பவற்றுக்கான குத்தகை - 2023

வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை எல்லைக்குள் அமைந்துள்ள நெளுக்குளம் மீன்கடை, தோணிக்கல் மீன்சந்தை, சாளம்பைக் குளம் மீன்கடை என்பவற்றுக்கான குத்தகை 2023ம் ஆண்டிற்கு நடத்துவதற்கு மீளவும் ஏலத்தில் விடப்படவுள்ளது.

**இடம் : வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை, நேரியகுளம் வீதி, நெளுக்குளம் ,வவுனியா.**

**காலம் : 2023.02.02ம் திகதி காலை 10.00மணி**

**நிபந்தனைகள்:**

1. ஏலதாரர் இலங்கைபிரஜையாக இருத்தல் வேண்டும்.
2. ஏலவிற்பனையின்போது கோரும் தொகையினை ஒரே கொடுப்பனவாக அன்றைய தினமே செலுத்துதல் வேண்டும்.
3. நெளுக்குளம் மீன்கடை ஆகக்குறைந்த கேள்வி -380000.00
4. சாளம்பைக்குளம் மீன்கடை ஆகக்குறைந்த கேள்வி - 135429.25
5. தோணிக்கல் மீன்சந்தை - 15255.92
6. ஏலவிற்பனையில் தெரிவுசெய்யப்படும் குத்தகைதாரர் நெளுக்குளம் மீன் கடைக்கு மாதாந்தவாடகையாக 2000.00 ரூபாவும் சாளம்பைக்குளம் மீன்கடைக்கு 1500.00 ரூபாவும் செலுத்தப்படல் வேண்டும்.
7. ஏலவிற்பனையில் தெரிவுசெய்யப்படும் குத்தகைதாரர் வாடகைப்பிணைப் பணம், கட்டட உடைவுப்பணமாக நெளுக்குளம் மீன்கடைக்கு 24000.00 ரூபாவும் சாளம்பைக்குளம் மீன்கடை,தோணிக்கல் மீன்சந்தைக்கு 18000.00 ரூபாவும் அன்றைய தினமே செலுத்துதல் வேண்டும்.
8. இந்நிபந்தனைகளை மாற்றுவதற்கோ,திருத்தவதற்கோ தலைவருக்கு அதிகாரம் உண்டு.

**தலைவர்,**
**வவுனியாதெற்கு தமிழ் பிரதேச சபை.**
**25.01.2023**

(CR.39103) (2.6)

## மரண அறிவித்தல்

தோற்றம் 09 . 10 . 1942

மறைவு 23 . 01 . 2023



## செல்வி புவனேஸ்வரி தியாகராஜா

யாழ்ப்பாணம் நல்லூர் கைலாசபிள்ளையார் கோவிலடியை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்டிருந்த செல்வி புவனேஸ்வரி தியாகராஜா அவர்கள் நேற்றுமுன்தினம் (23.01.2023) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தியாகராஜா மீனாட்சி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற ராஜேஸ்வரி, நேசநாதன் (யாழ்ப்பாணம்), தில்லைநாதன் (வவுனியா), காலஞ்சென்ற யோகநாதன், ஜெகநாதன் (அவுஸ்திரேலியா), சந்திரேஸ்வரி (அவுஸ்திரேலியா), லிங்கேஸ்வரி (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற ராஜன் கந்தசாமி, ஜெயலட்சுமி (யாழ்ப்பாணம்), காலஞ்சென்ற சரஸ்வதி, டாக்டர் சுலோசனா (நியூசிலாந்து), கமலேஸ்வரன் (அவுஸ்திரேலியா), விக்னராஜா (கொழும்பு) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.01.2023) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**392/1, நாவலர் வீதி,**
**கைலாச பிள்ளையார் கோவிலடி,**
**நல்லூர், யாழ்ப்பாணம்.**
**(உதயன் ஒழுங்கை)**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**தொ.பே.இல. [illegible]**

(CS 23112) 1/6

PEOPLE'S BANK

## தங்கநகை ஏலவிற்பனை அறிவித்தல்

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளிலும் சேவை நிலையங்களிலும் 30.09.2021 **வரையும் அடகு வைத்து மீட்கப்படாத நகைகள்** - 25.02.2023 **(சனிக்கிழமை),** 26.02.2023 **(ஞாயிற்றுக்கிழமை) ஆகிய திகதிகளில் காலை** 8.30 **மணிக்கு மக்கள் வங்கி, யாழ். ஸ்ரான்லி வீதிக்கிளையில்** வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

யாழ். ஸ்ரான்லி வீதி, மானிப்பாய், கொக்குவில் (நாவலர்) வீதி, தெல்லிப்பளை, மல்லாகம், காங்கேசன்துறை, யாழ் பிரதான வீதி, உரும்பிராய், ஊர்காவற்றுறை, நெல்லியடி, அச்சுவேலி, புத்தூர், சங்கானை, பண்டத்தரிப்பு, சுன்னாகம், கோப்பாய், அளவெட்டி, சாவகச்சேரி, கைதடி, வல்வெட்டித்துறை, யாழ். பல்கலைக்கழகம், திருநெல்வேலி, கல்வியங்காடு, யாழ். கன்னாதிட்டி, இணுவில், பருத்தித்துறை, புலோலி, கொடிகாமம்.

| | |
|---|---|
| **நகை மீளெடுப்பதற்கான இறுதி திகதி** | **: 24.02.2023** |
| **ஏலவிற்பனை நடைபெறும் இடம் திகதி** | **: யாழ் ஸ்ரான்லி வீதிக் கிளை** |
| **திகதி** | **: 25.02.2023 (சனிக்கிழமை)** |
| | **26.02.2023 (ஞாயிற்றுக்கிழமை)** |

அறிவித்தலின்றி திகதியை ஒத்திபோடுவதற்கும் ஏலம் விடப்படும் இடத்தினை மாற்றுவதற்கும் உரிமை வங்கிக்கு உள்ளது.

**பிராந்திய முகாமையாளர்,**
**மக்கள் வங்கி,**
**பிராந்திய தலைமையகம்,**
**இல: 82, கன்னாதிட்டி வீதி,**
**யாழ்ப்பாணம்.**


**தொ.பே.இல. : 021-222 2601 / 021-222 8602**
**தொலை நகல் : 021-222 2602**
**மின்னஞ்சல் : jafrho@peoplesbank.lk**

(in.18654) (2.6)

## மரண அறிவித்தல்

பிறப்பு 05 . 05 . 1934

இறப்பு 22 . 01 . 2023



## பொன்னுதுரை சண்முகநாதன்

நவாலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சைவப் புலவர் சோமசுந்தர புலவரின் வழித்தோன்றலும் ஆகிய பொன்னு துரை சண்முகநாதன் கடந்த (22.01.2023) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிராசிப்பிள்ளை (கமலா) வின் அன்புக் கணவரும், பரமேஸ்வரன் (ரமேஸ் - கனடா), பரணிதரன் (பரணி - கனடா), பாஸ்கரன் (கனடா), சந்திரவதனி (தங்கா), ஜெயவதனி (ஜெயா) ஆகியோரின் பாசமிகு தந்தை யும், சரோஜாதேவி, ஜாமினி, சந்திரமலர், பாகுலேயன், சிறீதரன் ஆகியோரின் மாமனாரும், சயந்தன், லினோயன், அனோயா, நிரோயன், ரதீசன், அபிசன், நிலக்சன், கரிசன், லினுயன், அகிசன், ஆதிதன், அக்சாயினி, அகர்சி, கரிகரன், அனுசா ஆகியோரின் பாசமிகு பேரனும், டக்சாயினி, டினோயன், காசினி ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.01.2023) புதன் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆரியம்பிட்டி இந்து மயானத் துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS/23114)4/6

**077 432 5741**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 1ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

அன்னை மடியில் • 15 • 03 • 1952



வேதவனத்தான் தாழில் • 05 • 02 • 2022

## அமரர் கதிரேசபிள்ளை தங்கராசா

(ஓய்வு பெற்ற இலங்கை வங்கி முகாமையாளர்-கொடிகாமம்
வேதவனப் பிள்ளையார் கோயில் தர்மகர்த்தா -கல்வயல்)

கால ஓட்டத்தில் கரைந்திட்ட நாட்களில்
கடந்ததுவோ ஓராண்டு ? அப்பா !
அன்பான உங்கள் முகம்- எங்கள்
உள்ளம் விட்டுத்தான் அகன்றிடுமோ ?
உறக்கத்தின் போதும் உயிர்நீத்து
எழுந்திடும் உங்கள் நினைவுகளால்
உள்ளக்குள்ளேயே ஊமையாய்
உருகி நிதம் வெதும்புகின்றோம்.
இயற்கையின் விதியை இறைவனின் நியதியை
மாற்றிடத்தான் முடியுமோ ?
" வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன். வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்."
என்ற வள்ளுவன் வாக்கிற்கிணங்க
உம் வழிகாட்டலில் தொடர்ந்து நகர்கின்றோம்
வாழ்கைப் பாதையிலே......
அப்பா உங்கள் ஆத்மா சாந்தி அடையட்டும் !
ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி !

அன்னாரின் முதலாம் ஆண்டு திதி இன்று (25.01.2023) புதன்கிழமை சாவகச்சேரி வடக்கு. மீசாலையில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

தொடர்புகளுக்கு
021 227 0477.

குடும்பத்தினர்.

# வவுனியா மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்

## பதவி வெற்றிடம் - வெளிவாரி நியமனம்

வவுனியா மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் கீழ்க் குறிப்பிடப்படும் பதவிகளுக்கு தகமையுள்ள விண்ணப்பதாரிகளிடம் இருந்து வெளிவாரியாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**01. பதவி/சம்பள அளவுத்திட்டம் :**

i. எழுதுனர் 302/12
18820-170x10-185x10-22370
வெற்றிடம் - 01

ii. கணினிப்பக்க உருவாக்குனர் 322/13
18360-160x10-170x10-21660
வெற்றிடம் - 01

(கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு சுற்று நிருபங்களுக்கு அமைவாக ஏனைய கொடுப்பனவுகளும் வழங்கப்படும்)

**02. தகமைகள் ( சுற்றுநிருபம் - 01/2021)**

**எழுதுனர் 302/12**

i. கூட்டுறவு ஊழியர் 13 ஆவது சம்பளத் திட்ட எழுதுனர் / கணக்காய்வு எழுதுனர் / காசாளர் / கணினிப் பக்க உருவாக்குனர் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம் /
கூட்டுறவு ஊழியர் 14 ஆவது சம்பளத் திட்ட கணக்குப்பதிவாளர் எழுதுனர் / காசாளர் / கணினிப்பக்க உருவாக்குனர் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

ii. அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப நிறுவனமொன்றில் / பயிற்சி நிறுவனமொன்றில் கணக்கியல்/ கணக்குப் பதிவியல் தொடர்பான பயிற்சி நெறிக்கான சான்றிதழ்.

அல்லது

iii. கூட்டுறவு ஊழியர் உயர்தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தி / க.பொ.த உயர்தரப்பத்திரப் பரீட்சையில் 03 பாடங்களுடனான சித்தி

iv. கூட்டுறவு ஊழியர் சாதாரண தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தி / க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் சிங்களம் / தமிழ்மொழி என்பவற்றை உள்ளடக்கி 03 திறமைச்சித்தியுடன் கணிதம் உட்பட 06 பாடங்களுடனான சித்தி

I. கூட்டுறவு ஊழியர் 14 ஆவது சம்பளத்திட்ட கணினிப்பக்க உருவாக்குனர் பதவியில் 02 ஆண்டு கால அனுபவம்/ கூட்டுறவு ஊழியர் 15 ஆவது சம்பளத் திட்ட கணினிப்பக்க உருவாக்குனர் பதவியில் 04 ஆண்டு கால அனுபவம்

அல்லது

II. க. பொ. த. சாதாரண தரப்பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது சிங்களம் / தமிழ் மொழி . கணிதம் என்பவற்றை உள்ளடக்கி 06 பாடங்களுடனான சித்தியுடன் அரச / அங்கீகரிக்கப்பட்ட கற்கை நிறுவனத்தில் 03 மாதங்களுக்கு குறையாத முழுநேர MS OFFICE / அதனையொத்த கணினிப் பாடநெறிக்கான சான்றிதழ்.

அல்லது

III. அரச / அங்கீகரிக்கப்பட்ட கற்கை நிறுவனத்தில் 03 மாதங்களுக்கு குறையாத முழுநேர கணினிப் பாடநெறிக்கான சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

**03. வயதெல்லை** : 18 – 45 ற்கு உட்பட்டிருத்தல்

**04. விண்ணப்ப முடிவு திகதி** : 14-02-2023

**05. குறிப்பு**

- கூட்டுறவுச் சங்கங்களின் நிரந்தரப்பணியாளர்களாயின் உரிய சங்கத்தின் தலைவர் ஊடாக விண்ணப்பிக்க வேண்டும். கூட்டுறவுச்சங்கப் பணியாளர்களாயின் வயதெல்லை ஏற்புடையதல்ல.
- ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிக்கலாம் ஒவ்வொரு பதவிகளுக்கும் தனித்தனியாக விண்ணப்பிக்க வேண்டும்.
- விண்ணப்பிக்கும் பதவி. முழுப்பெயர். நிரந்தரமுகவரி. தற்போதைய வசிப்பிட முகவரி. அடையாள அட்டை இலக்கம். பிறந்த திகதி. வயது. பால். கல்வித்தகமை. தொழிற் கல்வித்தகமை . சேவைத்தகமை ஆகிய சுயவிபரங்கள் அடங்கிய விண்ணப்படிவத்தினை தாங்களே தயாரித்து. கடித உறையின் இடதுபக்கமேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியினை குறிப்பிட்டு தலைவர். வவுனியா மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம். இல.44. குட்செட் வீதி. வவுனியா" என்ற முகவரிக்கு பதிவு தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

சு. புவனேந்திரராசா (JP) தலைவர்,
வவுனியா மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்,
இல.44, குட்செட் வீதி,வவுனியா.

திகதி : 25-01-2023

TP – 024-2222341 , 024-2222636

# மரண அறிவித்தல்

## திருமதி பாக்கியம் துரைரத்தினம்



**தோற்றம்:19.02.1945 மறைவு:24.01.2023**

கரம்பகம் மிருசுவிலைப் பிறப்பிடமாகவும். மட்டுவில் தெற்கு. சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாக்கியம் துரைரத்தினம் அவர்கள் நேற்று (24.01.2023) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசையா தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும். காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும். காலஞ்சென்ற துரைரத்தினத்தின் (ஓய்வுபெற்ற அதிபர்) அன்பு மனைவியும். சிவசுதன் (கனடா). சிவசுகுணா (யா/விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயம்). சிவசுபைதா (சாவகச்சேரி. மகளிர் கல்லூரி). சிவசுதனி (யா/ கைதடி நுணாவில் அ.த.க. பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தாயாரும். ரேவதி (கனடா). சந்திரகாந்தன் (ஓய்வு பெற்ற இ.போ.ச. சாரதி). ஸ்ரீகணேசன் (ஆசிரிய ஆலோசகர்-தென்மராட்சி வலயம்). கிரிவேல் (பொது முகாமையாளர் - அச்சுவேலி MPCS) ஆகியோரின் அன்பு மாமியாரும். சுதனா (கனடா). றொபீனா (கனடா). பிரியந்தா (மு/ சண்முகரட்ணம் வித்தியாலயம்). பானுஜா. அருள்வாரணன். சாகித்தியன். ஆருத்தியன். சாருக்தியன். கோகுலன் (யாழ். பல்கலைக்கழகம்). சுரேன் (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும். அனுக்ஷயன். மாறன் (கனடா) ஆகியோரின் அன்புப் பூட்டியும். நவரத்தினம் (கனடா). அழகரத்தினம் (ஓய்வூதிய மேற்பார்வையாளர்- தேசிய உப்புக் கூட்டுத்தாபனம்). தியாகராஜா (ஓய்வுபெற்ற பிரதம முகாமைத்துவ உதவியாளர். மாவட்ட செயலகம் - முல்லைத்தீவு). அமரர் விநாயகமூர்த்தி (இரசாயன கூட்டுத் தாபனம். பரந்தன்). திருஞானமூர்த்தி (ஓய்வுபெற்ற முகாமையாளர். தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை. கிளிநொச்சி). சிவராஜா (ஓய்வுபெற்ற சாரதி-காவகச்சேரி - ஆதார வைத்தியசாலை). தயாநிதி. பாலேந்திரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும். வள்ளிமுத்து (கனடா). ஜெபமணி. சந்திரகாந்தி. இராஜேஸ்வரி. கோமகலா (ஓய்வுபெற்ற ஆசிரியை. யா/கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயம்). விஜயவனிதா (ஓய்வு பெற்ற ஆசிரியை - யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி. அமரர் இராஜகோபாலசிங்கம். பிறேமலா (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.01.2023) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று. முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக மட்டுவில் நேரியதூ இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்தத் தகவலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'பாக்கியம்'
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

**தகவல்: பிள்ளைகள்**
**0777 6666 54**
**077 106 3311**

(CR 36828) 1-6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் சுதந்திரதினம் தமிழ் மக்களுக்குக் கரிநாள்

## கண்டனப் பேரணியை நடத்துவதற்கு பல்கலை மாணவர் ஒன்றியம் முடிவு

இலங்கையின் சுதந்திரதினம் தமிழர்களுக்குக் கரிநாள் எனத் தெரிவித்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், பெப்ரவரி மாதம் 4ஆம் திகதியன்று தமிழர் தாயகமெங்கும் மக்கள் எழுச்சிப் பேரணியை நடத்தவும் முடிவெடுத்துள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நேற்று நடந்த ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே மாணவர் ஒன்றியத்தினர் இவ்வாறு தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

ஆங்கிலேயரிடம் இருந்து இலங்கை சுதந்திரம் அடைந்திருந்தாலும் தமிழ் மக்களாகிய எமக்கு இன்னமும் சுதந்திரம் கிடைக்கவில்லை. சிங்களப் பேரினவாத அரசின் திட்டமிடப்பட்ட இன அழிப்பு நடவடிக்கைகள் தொடர்வதால் பெப்ரவரி 4ஆம் திகதியை காலம் காலமாக தமிழர்கள் கரிநாளாகத்தான் கடைப்பிடித்து வருகிறோம்.

தமிழர் தாயகப்பகுதிகளில் மக்களின் பூர்வீகக் காணிகள் அபகரிப்பு, பௌத்தமயமாக்கல் என்பன இன்று வரை புதிய புதிய வடிவங்களில் தொடர்கின்றன. போர் முடிந்து 14 ஆண்டுகள் கழிந்தும் பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படவில்லை. தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கப்படவில்லை, தமிழினப் படுகொலைகளுக்கான நீதி கிடைக்கவில்லை, காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் அரசு பொறுப்புக்கூறவில்லை. தமிழ் மக்களையும் சர்வதேசத்தையும் இலங்கை அரசு ஏமாற்றி வருகிறது.

அரச படைகளால் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், தமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதை தேடி வருடக்கணக்காகப் போராடி வருகிறார்கள். தமிழ் அரசியல் கைதிகள் 10 வருடங்களுக்கு மேலாக தமது விடுதலையை எதிர்பார்த்து சிறையில் வாடுகிறார்கள். தமது பூர்வீக நிலங்களை பறிகொடுத்துவிட்டு இன்றுவரை வீதியில் போராடும் தமிழர்கள் ஏராளம். தமிழர் பகுதிகளில் தமிழருக்கு அனுமதி வழங்காமல் சிங்களக் குடியேற்றங்களுக்கு அனுமதி வழங்குகிறார்கள். தமது உரிமைகளுக்காகப் போராடும் மக்கள் கைதுசெய்யப்பட்டு அச்சுறுத்தப்படுகிறார்கள். இவ்வாறு தமிழர் தாயகத்தில் தமிழ் மக்களின் இருப்பு தற்போது கேள்விக்குறியாகியுள்ள நிலையில் இலங்கையின் சுதந்திர நாளை நாம் கரிநாளாகப் பிரகடனப்படுத்தி எமது எதிர்ப்பை இந்த அரசுக்குத் தெரிவிப்பதுடன் சர்வதேசத்துக்கு தமிழ் மக்களின் உண்மை நிலையை உரத்துக் கூறவேண்டும்.

அந்த வகையில் மாணவர்களாகிய நாம் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 4ஆம் திகதி பெரும் மக்கள் எழுச்சிப் பேரணி ஒன்றை முன்னெடுக்கத் திட்டமிட்டுள்ளோம். அதற்குக் கட்சி பேதங்களைக் கடந்து சகல தரப்பினரின் ஒத்துழைப்பையும் வேண்டி நிற்கிறோம். எமது உரிமைகளை நாம் விட்டுக் கொடுக்காமல் எமது இருப்பை உறுதி செய்வதற்கு நாம் போராடவேண்டும். ஆகவே பெப்ரவரி 4ஆம் திகதி தமிழர் தாயகம் எங்கும் சிங்கள தேசத்தின் சுதந்திரதினத்தைப் புறக்கணித்து இந்த மக்கள் எழுச்சிப் பயணத்தில் எம்முடன் ஒன்றுகூடுமாறு கேட்டுக்கொள்கிறோம் - என்றனர். (ம-27)

### அரசமைப்புப்...

இது தொடர்பில் அவர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

'பல மாதங்களாக இந்த நாட்டின் ஜனாதிபதி, பிரதமர், அமைச்சரவை மற்றும் அரசுடன் தொடர்புடைய தரப்புக்கள் உள்ளூராட்சிசபைத் தேர்தலைத் தடுக்கவும், சீர்குலைக்கவும் பெரும் சதியில் ஈடுபட்டன. ஒரு கட்டத்தில் அமைச்சரவை மேற்கொண்டதாக பொய்யான தீர்மானங்கள், மோசடித் தீர்மானங்கள் எடுக்கப்பட்டு வேட்பாளர்களின் கட்டுப்பணத்தை ஏற்காதிருக்கும் துரோக நடவடிக்கையில் அரசாங்கம் ஈடுபட்டது. மற்றுமொரு சந்தர்ப்பத்தில் திறைசேரியின் செயலாளர் மூலம் தேர்தலுக்கான பணத்தை வழங்கமுடியாது என்றும், அரசிடம் பணமில்லை என்றும், சமூக நலப்பணிகள் உட்பட சம்பளம் வழங்குவதற்குக்கூட முடியாதுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. இந்த நிலையில் அரசு, தேர்தலை ஒத்திவைக்கப் புதிய சூட்சுமத்துக்குத் தயாராகின்றது.

இந்தத் தேர்தலைச் சீர்குலைக்கும் புதிய நடவடிக்கையாக அரசமைப்பு பேரவையின் ஊடாகத் தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர்களை மாற்றியமைத்து தேர்தல் ஆணைக்குழுவைச் சீர்குலைக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மக்களின் இறையாண்மையில் கைவைத்தால் அதற்கு வழங்கும் தண்டனை நாட்டின் சட்டப் புத்தகங்களில் குறிப்பிடப்பட்டுள்ளதால் அமைச்சரவைத் தீர்மானம் மற்றும் திறைசேரி செயலாளர் ஊடாக மக்கள் இறையாண்மையை நாசம்செய்யும் முயற்சிகளுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி நீதிமன்றம் செல்லும்.

எதிர்வரும் மார்ச் மாதம் 9 ஆம் திகதி நடைபெறவுள்ள தேர்தலைச் சீர்குலைக்க அரசமைப்புப் பேரவைக் கூட்டத்தைப் பயன்படுத்தினால், நாட்டு மக்களின் வாக்குரிமையைப் பாதுகாக்கும் வகையில் அந்தச் சூட்சும நடவடிக்கையை நிச்சயம் தோற்கடிப்போம். அதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வோம்.

அதேபோல், இன்று கூடும் அரசமைப்பு பேரவைக் கூட்டத்தின் நிகழ்ச்சி நிரலில் தேர்தலை ஒத்திவைக்கும் சதித்திட்டங்களைச் சேர்க்க வேண்டாம் எனவும், சுயாதீனமான தேர்தல் ஆணைக்குழு பிரதிநிதிகளுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் எதையும் செய்யக்கூடாது எனவும் அரசமைப்பு பேரவையின் பொறுப்பு வாய்ந்த பிரதிநிதிகளிடம் கேட்டுக்கொள்கின்றோம் - என்றுள்ளது. (அ-ம-22)

### அம்புலன்ஸ்...

பூநகரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட செம்மண்குன்றுப் பகுதியில் நோயாளர்காவு வண்டி மோதியதில் சிறுவன் ஒருவன் நேற்று உயிரிழந்துள்ளான். யோகநாதன் நிரோஜன் (வயது - 9) என்ற சிறுவனே உயிரிழந்தவராவான்.

வீதியின் மறுபுறத்தில் நின்ற பாண் விற்கும் முச்சக்கரவண்டியில் பாணைக் கொள்வனவு செய்துகொண்டு வீதியைக் கடக்க முற்பட்டபோதே, நோயாளர் ஒருவரை ஏற்றுவதற்காக விரைந்து கொண்டிருந்த நோயாளர் காவுவண்டி மோதி இந்த விபத்துச் சம்பவித்துள்ளது.

விபத்தை அடுத்து குறித்த சிறுவன் பூநகரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்ட போதிலும் சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தான். இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிரேமகுமார் மேற்கொண்டார். பூநகரிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-113-26)

### பலாலி...

இதன்படி, மேற்படி நபர்கள் காணி உறுதிப் பத்திரம், தோம்பு, வங்கிக் கணக்குப் புத்தகம், தத்துவ உரித்தாளர் சத்தியக் கடதாசி முடித்த படிவம், தேசிய அடையாள அட்டை என்பவற்றுடன் நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தெல்லிப்பழை பிரதேச செயலகத்துக்கு வருமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (அ-ம)

### வாகனத்தால்...

வன்முறைக் குழுக்களுக்கு இடையிலான மோதலின் பின்னணியிலேயே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கப் ரக வாகனத்தில் வந்த ஒரு கும்பல், காரை மோதித்தள்ளி விபத்தை ஏற்படுத்திவிட்டு பின்னர் காரில் வந்த இளைஞர்கள் மீது இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளது. தாக்குதலை நடத்திய கும்பல் 'கப்' ரக வாகனத்தைக் கைவிட்டுவிட்டுத் தப்பிச் சென்றுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை சுன்னாகம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த வாள்வெட்டுத் தாக்குதல் தொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்றும் இது தொடர்பில் தனக்கு சிறப்பு அறிக்கையிடுமாறும் வடக்கு மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் யாழ்ப்பாணம் மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் மற்றும் யாழ்ப்பாண சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் சுன்னாகம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆகியோருக்கு உத்தரவிட்டுள்ளார். (அ-ம-26-20-66-27)

### கண்டதும்...

இரண்டு வன்முறைக் கும்பல்கள் இணைந்து மற்றொரு கும்பலைச் சேர்ந்தவரை காருக்குள் வைத்து தீவைத்து கொலைசெய்யமுயற்சித்ததன்விளைவே சுன்னாகத்தில் இடம்பெற்ற நேற்றைய சம்பவம் என்று பொலிஸார் தமது முதற்கட்ட விசாரணையின் அடிப்படையில் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் வடமாகாணத்தில் நேற்றுப் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ள நிலையில், வன்முறைக் கும்பல்களின் பிரதான சூத்திரதாரிகளைக் கண்டால் துப்பாக்கிச்சூடு நடத்தும் உத்தரவைப் பெறுவதற்கும் பொலிஸார் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

நேற்று நள்ளிரவு கிடைத்த தகவல்களின் அடிப்படையில், இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸாரின் ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்துள்ளதாவது:-

வன்முறைகளுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் தடுத்துவைக்கப்பட்ட நபரொருவர் தனது தாயாரின் இறுதிச் சடங்கில் பங்கேற்பதற்காக நேற்று முற்பகல் சிறையிலிருந்து பிணையில் வெளிவந்துள்ளார். அவர் காரில் வருவதாக அறிந்த மேலும் இரு வன்முறைக் கும்பல்கள் சிறையில் இருந்து வெளிவந்தவரை சுன்னாகத்தில் நடுவீதியில் வைத்துக் கொல்வதற்குத் திட்டமிட்டுள்ளது. காரை தீவைத்து எரிக்க வன்முறைக் கும்பல் பெற்றோலையும் எடுத்து வந்துள்ளது. காரை நடுவீதியில் வாகனத்தால் மோதி விபத்துக்குள்ளாக்கிய கும்பல் அதில் பயணித்தவர்களையும் தாக்கியுள்ளது. எனினும் அவர்கள் தேடிவந்த நபர் அந்தக் காரில் இல்லை என அறிந்ததும் வன்முறைக் கும்பல் தப்பித்துள்ளது. தாக்குதலுக்குத்திட்டமிட்டவர்கள் முகத்தில் கறுப்புத் துணியணிந்து வந்துள்ளனர். சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் சுன்னாகம் பொலிஸாரால் மருத்துவமனையில் வைத்து ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். அவர் மோதி விபத்தை ஏற்படுத்திய வாகனச் சாரதி என்று தெரிவிக்கப்பட்டது. இது, விபத்து என்ற ரீதியில் வழக்கை திசைமாற்ற எடுத்த நடவடிக்கை என பொலிஸ் மட்டத்தில் பேசப்படுகிறது.

இதேவேளை, வன்முறைக் கும்பல்களின் அடாவடி அதிகரித்துள்ளதால் பொலிஸ் நிலையங்கள் மீதும் தாக்குதல் நடத்தப்படலாம் என்ற அச்சத்தில் வன்முறையில் ஈடுபடுவோரை கண்ட இடத்தில் சூடு நடத்துவதற்கான கட்டளையைப் பெறுவது தொடர்பில் பொலிஸ் உயர்மட்டம் ஆராய்ந்து வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

மலர்வு 29 • 12 • 1949



உதிர்வு 23 • 01 • 2023

## திருமதி தங்கமலர் நடராசா

மண்கும்பான் மேற்கு, 5ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் இல.55, அம்பலவாணர் வீதி, அத்தியடி யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கமலர் நடராசா அவர்கள் நேற்றுமுன்தினம் (23.01.2023) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயம்பிள்ளை நடராசாவின் (மைதிலி நகைமாட ஸ்தாபகர்) பாசமிகு மனைவியும் காலஞ்சென்ற செல்லையா தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற ஐயம்பிள்ளை இரத்தினம் தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்றவர்களான வீரசிங்கம் (செல்லையா அன் சன்ஸ்), இந்திரசிந்து (முன்னாள் உரிமையாளர் லலிதா ஜுவல்லறி), சிவலிங்கம் (செல்லையா சிவலிங்கம் நகை மாளிகை) மற்றும் சிவபாதலிங்கம் (செல்லையா சிவபாதலிங்கம் நகை மாளிகை), மல்லிகாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும், மாலினி, மைதிலி, ஆனந்தன் (மைதிலி நகை மாடம் Pvt Ltd, யாழ் மைதிலி ஜுவல்லறி, செட்டித்தெரு, கொழும்பு), கஜந்தன் (நியூ மைதிலி ஜுவல்லர்ஸ், சந்தோஷ் ஜுவல்லரி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற நாகம்மா, மகாலட்சுமி, யோகேஸ்வரி, மகுடராணி, காலஞ்சென்ற பூலோகநாதன் (குமரன் ஸ்ரோர்ஸ், நாரம்மல), சுந்தரலிங்கம், இராஜலிங்கம் (முருகன் ஸ்ரோர்ஸ், நாரம்மல), காலஞ்சென்ற அன்னலிங்கம், ஞானேஸ்வரன் (கனடா) ஆகியோரின் மைத்துனியும், பரமசிவம் (சிறி மதனா நகைமாளிகை, மதனா நகை மாடம்), நகுலேஸ்வரன் (நகுலா ஜுவல்லறி, நியூ லலிதாஸ் ஜுவல்லறி), சிவரஞ்சினி, துஷ்யந்தி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், அபிலாஜினி-சுரேகன் (லண்டன்), மதனகாந் (மதனா நகைமாடம்), பிரபகாந், சாருண்யா, தர்ஷகாந் (யா/ சென் ஜோன்ஸ் கல்லூரி, A/L), கௌஷனா - அனுசன் (நியூ நகுலா ஜுவல்லறி), லலிதாஜினி (SLIIT 4th year), சனுஜா (யா/இந்து மகளிர் கல்லூரி A/L), வினுசன் (யா/இந்து கல்லூரி G-11), கரீஸ் (யா/இந்துக் கல்லூரி G-8), காலஞ்சென்ற சந்தோஷி மற்றும் டினோசி (கொ/சைவமங்கையர் வித்தியாலயம் G-11), பிரவினாஷ் (கொ/சென் பீற்றேர்ஸ் கல்லூரி G-09) ஆகியோரின் நேசமிகு பேர்த்தியும், தஸ்வந்தின் (லண்டன்) அன்புப் பூட்டியும் ஆவார்.

**அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.01.2023) புதன்கிழமை காலை 7.00 மணிக்கு நடைபெற்று, முற்பகல் 10.00 மணியளவில் தகனக்கிரியைக்காக வேலணை சாட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.**

**இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.**

55, அம்பலவாணர் வீதி,
அத்தியடி, யாழ்ப்பாணம்.

நடராஜா கஜந்தன் (மகன்)
நியூமைதிலி ஜுவல்லர்ஸ், சந்தோஷ் ஜுவல்லரி
யாழ்ப்பாணம். 0777 23 49 12

தகவல்:
குடும்பத்தினர்

(CR/39112)4/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org